வலம்புரி
VALAMPURI

சங்கு 03 | வள்ளுவர் ஆண்டு 2033 | பங்குனி 11 | திங்கட்கிழமை (25.03.2002) | தொலைபேசி 3378 | ஒலி 96




### சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர்

# பத்திரிகையாளர் மத்தியில் தலைவர் பிரபா தோன்றுவார்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் எதிர் வரும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன் பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்த திட்டமிட்டுள்ளார் என கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதை அடுத்து இவ்வொப்பந்த விடயங்கள், விடுதலைப் புலிகளின் அரசியல் நிலைப்பாடு, சமாதானப் பேச்சுக்களின் போது வலியுறுத்தவுள்ள விடயங்கள், (ஏ-9) பாதை திறப்பு, மற்றும் இலங்கை விவகாரத்தில் அந்நிய சக்திகளின் தலையீடு குறித்து தலைவர் பிரபா பத்திரிகையாளர் மாநாட்டில் விளக்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பத்திரிகையாளர் மாநாட்டில் விடுதலைப் புலிகளின் முக்கிய அரசியல் தலைவர்களான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் சு.ப. தமிழ்ச்செல்வன் ஆகியோரும்



(8ம் பக்கம் பார்க்க)

### மதகுருமார்- பிரமுகர்கள் முன்னிலையில்

# ஈ.பி.டி.பியினர் நேற்று ஆயுதம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட ஈ.பி.டி.பி அமைப்பினர் நேற்று தமது ஆயுதங்களை 51ஆவது இராணுவ பிரிகேட் தளபதி ரஞ்சித் சில்வாவிடம் கையளித்துள்ளனர்.

ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்ட அலுவலகத்தில் மாலை 3.15 மணிக்கு இடம்பெற்ற இவ் ஆயுதக் கையளிப்பு வைபவத்திற்கு கட்சியின் யாழ் அமைப்பாளர் கே.வி. குகேந்திரன் (ஜெகன்) தலைமை தாங்கினார்.

வைபவத்தின் ஆரம்பத்தில் சமாதானத்தை வலியுறுத்தும் வகையில் வெள்ளைப்புறா ஒன்றும் பறக்க விடப்பட்டது.

நிகழ்வில் யாழ் மாவட்ட இராணுவ மற்றும் கடற்படை அதிகாரிகள் சர்வதேச மோதல் தவிர்ப்புக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள் இராணுவப் படப்பிடிப்பாளர்கள் யாழ் அரச

(8ம் பக்கம் பார்க்க)

### மாலைதீவில் இருந்து இன்று வன்னி வரும்

# ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தலைவர் பிரபாவுடன் பேசுவார்



(நமது நிருபர்)

**இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஆரம்பிக்கப்படவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை நேரில்சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மாலைதீவில் இருந்து இன்று வன்னிக்குச் செல்லவுள்ளார்.**

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் வன்னிக்கு வருவது இது முதற்தடவையாகும். அன்ரன் பாலசிங்கம் அவரது மனைவி அடேல் பாசிங்கமும் வருகை தரவுள்ளார்.

வன்னிக்கு வருவதற்காக லண்டனில் இருந்து எமிரேட்ஸ் விமானத்தில் புறப்பட்ட இவர்கள் தற்போது மாலைதீவில் வந்திறங்கி அங்கு தங்கியுள்ளனர். அன்ரன் பாலசிங்கத்தின் வன்னி வருகைக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை நோர்வேத் தூதுவர் நேரடியாகக் கையாண்டு வருகின்றார்.

மாலைதீவில் தங்கியுள்ள இருவரும் மாலைதீவுக் கடற்படையிடம் உள்ள தரையிலும், நீரிலும் பயணிக்கக் கூடிய சிறிய விமானம் மூலம் நேரடியாக வன்னிக்கு வருவார்கள் என்றும் செய்திகள்

(8ம் பக்கம் பார்க்க)

## ஈ. பி. டி. பியினர் ஒப்படைத்த ஆயுதங்களின் விபரம்

(யாழ்ப்பாணம்)

ஈ.பி.டி.பியினரால் நேற்றுக் கையளிக்கப்பட்ட ஆயுத உபகரணங்களின் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| * ரீ- 56 வகைத் துப்பாக்கி | - 180 |
| * ஏ. கே. எல். எம். ஜி இயந்திரத் துப்பாக்கி | - 11 |
| * எம். 8 வகை இயந்திரத் துப்பாக்கி | - 01 |
| * ஆர். பி. ஜி செல் ஏவுகலம் | - 03 |
| * ஆர். பி. ஜி செல்கள் | - 13 |
| * கிறனைற் | - 34 |

(8ம் பக்கம் பார்க்க)



தமிழீழ காவல் துறையின் 10வது ஆண்டு நிறைவை ஒட்டி இடம்பெற்ற காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையை தலைவர் பிரபாகரன் ஏற்றுக் கொள்ளும் காட்சி.

# விடுதலைப் புலி உறுப்பினர்கள் இன்று யாழ்ப்பாணம் வருவர்

### எங்கும் வரவேற்புப் பதாதைகள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அணியொன்று இன்று யாழ்ப்பாணத்திற்கு வருகைதரவுள்ளதாக தெரியவருகிறது.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு நேற்றுடன் 30 நாட்கள் கடந்து விட்டன இந்நிலையில் உடன்படிக்கைக்கமைய 30 நாட்களுக்கு பின்னர் விடுதலைப் புலிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் ஆயுதங்கள் இன்றி நடமாட முடிவதுடன் தமது அலுவலகங்களையும் திறந்து அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட முடியும்.

இதன் அடிப்படையிலேயே இன்று வன்னியில் இருந்து யாழ் குடாக்கடல் ஊடாக விடுதலைப் புலிகளின் 50போராளிகள் யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளதாக தெரியவருகிறது. இதேவேளை யாழ் குடாநாட்டில் விடுதலைப் புலிகளின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் யாழ் மக்கள் தமது மகிழ்வை வெளிப்படுத்தும் வகையில் வீதிகள் மற்றும் முக்கிய சந்திகளில்

(8ம் பக்கம் பார்க்க)

# வவுனியாவிலும் ஆயுதம் கையளிப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள ஈ.பி.டி.பி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் (சுரேஷ், வரதர்) அணிகள் ஆகிய தமிழ்க் கட்சிகள் தம்வசம் உள்ள ஆயுதங்களை வன்னி மாவட்ட படைத்தளபதி மேஜர் ஜெனரல் சூல செனவிரத்தனவிடம் கையளித்துள்ளன.

வவுனியா மாவட்டத்தில் உள்ள தமிழ்க் கட்சிகள் யாவும் தத்தமது மாவட்டச் செயலகங்களில் மதத் தலைவர்கள் மூத்த

(8ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### இறைச்சிக்கோழி

புறொயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து நியாயவிலையில் 24மணி நேரமும் பெற்றுக்கொள்ளலாம். 61 இராமநாதன் வீதி (மிலேனியம் பாருக்கு முன்பாக) யாழ்ப்பாணம். (4874)

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம்கிடைக்குமா? வியாபாரம்சிறக்குமா? விவாகம் நடைபெறுமா? நோய் நீங்குமா? வெளிநாடுபோகலாமா? கேட்டுப்பாருங்கள்; த.சிவானந்தன் பிரபல சோதிடர் ஆனந்தா சோதிடம்264, பலாலி வீதி, கந்தர்மடம். (4876)

### தேவை

யாழ். நகரில் ஆரம்பிக்கப்பட உள்ள ஆடைத் தொழில் சாலைக்கு துணி வெட்டுபவர், தைப்பவர், பூவேலை செய்பவர் தேவை. அனுபவம் வாய்ந்தவர் பயிலுநர்கள் தங்கள் சுய விபரம் அடங்கிய விண்ணப்பத்தை அனுப்ப வேண்டிய முகவரி விளம்பர இல-241, மே/பா, வலம்புரி. (சி-3757)

# சரியான திட்டம் இல்லாமையால் 365 மில்லியன் பயன்படுத்தவில்லை

## கரிகாலன் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வெளிநாட்டு நிறுவனங்களால் வழங்கப்பட்ட 365 மில்லியன் ரூபா, சரியான திட்டங்கள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் பயன்படுத்தப்படவில்லை.

இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கரிகாலன் தெரிவித்துள்ளார்.

மேற்குறிப்பிட்ட வழிகளால் கிடைக்கும் நிதியினைக் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மக்களின் தேவைகளை இனங்கண்டு திட்டங்களைத் தயாரிக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மட்டக்களப்பு கரடியனாறு மகாவித்தியாலயத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கான அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக அண்மையில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் உரையாற்றிய கரிகாலன் மேலும் பேசியதாவது.

மக்களின் தேவைகளைப் புரிந்துகொள்ளாத அரச அதிகாரிகளின் போக்கினால் மக்கள் பெரிய கஷ்டங்களை அனுபவித்து வருகிறார்கள்.

அதிகாரிகள் கொழும்பில் இருந்துகொண்டே ஆலோசிப்பதன் மூலம் மக்களின் தேவைகளை நிறைவேற்றிவிட முடியாது. (எ-8)

# இராசிபலன்

25 - 03 - 2002
(பங்குனி 11 திங்கள்)
ஏகாதசி மு.ப 9.58 வரை
ஆயிலியம்

இராகுகாலம் 7.45-9 15
நல்லநேரம் 12.15-1.45

**மேடம்**
காரியஅனுகூலம், அந்நியர் சந்திப்பு, நல்லசெய்தி.

**இடபம்**
மாதர் நட்பு, முயற்சி கைகூடும், தொழில்நன்மை, நண்பர்கள் சந்திப்பு.

**மிதுனம்**
பெரியோர் மதிப்பு, போசனசுகம், அதிகமானகற்பனை நல்ல செய்தி,

**கடகம்**
உறவினர் மனஸ்தாபம், காரிய அலைச்சல், வீண்செலவு காரியதடங்கல்.

**சிங்கம்**
காரியஜெயம், மனச்சந்தோசம், நண்பர்கள் சந்திப்பு, பெருமிதம்.

**கன்னி**
நல்ல செய்தி, கீழ் படிவு, தொழில் கஷ்டம், வீண்பயம்

**துலாம்**
காரியம் கைகூடும், உடல் உழைப்பு, பெரியோர் மதிப்பு வாக்குமேன்மை.

**விருச்சிகம்**
முயற்சி தடங்கல், உறவினர் வெறுப்பு, போசனசுகம், சுபநிகழ்வு.

**தனுசு**
நண்பர்கள் உதவி, தனலாபம், காரியம்வெற்றி, நல்ல வரவேற்பு.

**மகரம்**
தொழில் முன்னேற்றம், முயற்சி கைகூடும், மன மகிழ்ச்சி, நோய் குணமடைதல்

**கும்பம்**
தொழில்நன்மை, பிரயாண தாமதம், காரியதடை, தாழ்ந்த சுபாவம்.

**மீனம்**
விரும்பாத உறவு, மன அலைச்சல், ரோகபயம், வீண் கற்பனை

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்.

# போரூட் நிறுவனத்தினால் மீனவக் குடும்பங்களுக்கு வீடுகள் அமைக்கப்படும்

(மந்திகை)

பருத்தித்துறை இன்பருட்டிப் பகுதியில் போரூட் நிறுவனத்தினால் வறுமைக் கோட்டின் கீழ்உள்ள ஐந்து மீனவக் குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது.

ஒவ்வொரு வீடும் ஐம்பத்தி ஆறாயிரம் ரூபா செலவில் கட்டிக்கொடுக்கப்படவுள்ளது.

இதுசம்பந்தமான நடவடிக்கைகளை இன்பருட்டி கடற்றொழிலாளர் சங்கம் மேற்கொண்டுள்ளது. (செ-23)

# வடக்கு - கிழக்கில் அரச வர்த்தக பொதுக் கூட்டுத்தாபனம் விஸ்தரிப்பு

(கொழும்பு)

அரச வர்த்தக பொதுக்கூட்டுத்தாபனம் வடக்கு-கிழக்கில் தம்து சேவையை விஸ்தரிக்கவுள்ளது.

இத்தாபனம் அரசின் நூறுநாள் துரித அபிவிருத்தித் திட்டத்தின்கீழ்அதிகளவு பொருட்களை வடக்கு- கிழக்கிற்கு அனுப்பி குறைந்த விலையில் விற்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூட்டுத்தாபனத்தின் பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார்.

தற்போது யாழ்ப்பாணம், கல்கிஸை, காலி, களுத்துறை, குருநாகல், மொரட்டுவ, கண்டி, இரத்தினபுரி ஆகிய இடங்களிலும் தமது கிளைகளைப் புனரமைப்புச் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. (செ)

# போராட்ட பலத்துடன் பேச்சு 'நடத்துகிறோம்

## கரிகாலன்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் போராட்ட பலத்துடன்தான் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கரிகாலன் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலியர்களுக்கும்பலஸ்தீனர்களுக்கும் இடையே சமாதானப் பேச்சுக்கள் நோர்வேயின் அனுசரணையுடன்தான் நடைபெற்றது எனினும்அப் பேச்சுவார்த்தை காலத்தில் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் யஸீர் அரபாத் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்தார் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-8)

# வவுனியாவுக்கு மேலதிக ரயில் சேவை

(கொழும்பு)

வவுனியாவுக்கான மேலதிக ரெயில் சேவைகளை ஆரம்பிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ரெயில்வே திணைக்கள அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

யாழ்.கண்டிவீதி திறக்கப்பட்டு பயணிகள் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படவுள்ளதால் வடபகுதிசெல்லும் பயணிகளின் நன்மைகருதி இந்த ரெயில்சேவைகள் எதிர்வரும் வியாழக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.

கொழும்பு-வவுனியாரெயில் சேவைகளுக்கு மேலதிகமாக மாத்தறை வவுனியாரெயில் சேவைகளை ஆரம்பிக்குமாறு பிரதமர்ரணில் ரெயில்வே பொதுமுகாமையாளர் பிறியல் டி.சில்வாவுக்கு உத்தரவிட்டுள்ளார்- (ந-5)

# மாடு மேய்த்தவர்களை திருடர் கோஷ்டி தாக்கியது

(மந்திகை)

மாடு மேய்த்துக் கொண்டிருந்தவர்கள் திருடர் கோஷ்டியினால் தாக்கப்பட்ட சம்பவம் தம்பான் பகுதியில் நடைபெற்றுள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற இச்சம்பவத்தில் யாக்கருவைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவபாதராசா (வயது- 22) கணபதி சிவபாதம் (வயது 34) ஆகிய இருவருமே இரும்புக் கம்பி, பொல்லுகளால்தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திருடர் கோஷ்டி மாடுகளை திருட முற்பட்ட பொழுதே இரு பகுதியினருக்கும் வாய்த் தர்க்கம் ஏற்பட்டு பின்னர் கைகலப்பு ஏற்பட்டது. (செ-23)

# புளொட் முகாம்கள் மூடப்பட்டன

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு இராணுவ கட்டுப்பாட்டில் இருந்த புளொட் அமைப்பின்இரண்டு முகாம்கள் மூடபபட்டன.

இந்தமுகாம்கள்வவுணதீவுப் பாலம், கொடுவமடுப் பாலம் ஆகிய இடங்களில் இதுவரை இயங்கி வந்துள்ளன. (எ-5)

# 5 ஆயிரம் ஆசிரியர் வெற்றிடம்

(கொழும்பு)

வடக்குகிழக்கில் 5ஆயிரம் ஆசிரியர்களுக்கு வெற்றிடங்கள் நிலவுவதாக மட்டக்களப்புமாவட்ட வலயகல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இவற்றில் ஆயிரத்து650 ஆங்கில ஆசிரியர்களுக்கான வெற்றிடமும் உள்ளதாக அவர் கூறியுள்ளார். (செ-5)

# மிதிவெடி விழிப்புணர்வு ஆற்றுகை

(யாழ்ப்பாணம்)

யுனிசெவ் நிறுவனமும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும் இணைந்து நிகழ்த்தும் 'நெஞ்சுறுத்தும் கானல்' மிதிவெடி விழிப்புணர்வு ஆற்றுகை நாளை செவ்வாய் மு.ப. 11.30 மணிக்கு அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (க-3)

# ஓ.எல். பரீட்சைமுடிவு ஏப்ரல் முற்பகுதியில்

(கொழும்பு)

கடந்த டிசம்பர்மாதம் நடைபெற்ற க.பொ.த சாதாரணதர பரீட்சைப் பெறுபேறுகளை ஏப்ரல் முற்பகுதியில் வெளியிடுவதற்கு பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதற்கான இறுதிக் கட்ட நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-5)

இன்று (25-03-2002) சிவயோக சுவாமிகள்
குருபூசத் தினம்

## பாடிப் பரவுநாள் இன்று

செல்லப்பர் யோகர் சிரித்து விளையாடி
நல்லூரரான் தேரடியில் நன்கமர்ந்து-நல்லரும்
ஞான மழைபெய்து நல்லூழ் பெருக்குமோர்
தானமாய்க் கொண்டிருப்பர் தாம்.

வில்வ மரத்தடியில் வேடிக்கை பேசிப்பின்
நல்லதொரு சீடனாய் நாடறிய--செல்லப்பன்
தேடி யெடுத்த சிவயோக சாமியை நாம்
பாடிப் பரவுநாள் இன்று.

ஆயிலிய நற்சுப நன்நாளாம் பங்குனியில்
காயமது நீத்துக் கடவுளடி--மேய
சிவயோக ஞானிதன் சீரடிகள் போற்று
தவமாய நாளின்றே யாம்.

சேந்தன்

# ஆயுதக் கையளிப்பு சமாதானத்தின் முதற்படி

## கண்காணிப்புக்குழு உறுப்பினர் உரை

(யாழ்ப்பாணம்)

சமாதானத்தின் தூதுவர்களாக நாங்கள் வந்துள்ளோம் இவ் ஆயுதக்கையளிப்பு நடவடிக்கை சமாதானத்திற்காக எடுத்துவைக்கப்படும் முதலாவது படியாகவே நாம் இதை கருதுகின்றோம்.

இவ்வாறுமோதல் தவிர்ப்புக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதி ஒருவர் உரையாற்றும் போது தெரிவித்தார்.

யாழ்.ஈ.பி.டி.பியினரின் நேற்றைய ஆயுதக்கையளிப்பு நிகழ்வில் நோர்வே, சுவீடன், பின்லாந்து ஆகியநாடுகளைச் சேர்ந்த ஆறுமோதல்தவிர்ப்புக் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இவர்களில் ஒருபிரதிநிதியே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்குமேலும்பேசுகையில்.

சகல தரப்பினரும் சமாதான நிலைமையை உணர்ந்து 20வருடகாலஇரத்தக்களரிக்கு முடிவுகட்ட முன்வரவேண்டும் இதன்மூலம் உண்மையான சுபீட்சத்தை அடைய முடியும் என்றார். (இ-19)

# அழுது அடம்பிடிக்கும் குழந்தைகளை அடக்கிடும்

# நாட்டுப்புறத் தாலாட்டுப் பாடல்களின் இசை

**மு. கடம்பநாதன் எம்.ஏ (இசை)**

குழந்தைக்குப் புரியும் படியாகக் குழந்தைப் பாடல்களைப் பாடுவது அல்லது அப்பாடல்களைவிடச் சிறிது தரம் உயர்ந்த பாடல்களைப் பெற்றோர்கள் அல்லது மற்றவர்கள் பாடுவது. குழந்தைப் பாடல்களைக் குழந்தைகள் இயல்பாக இருக்கும் பொழுதும் அல்லது விளையாடும் பொழுதும் குழந்தைகளே பாடுவது. குழந்தைக்காகத் தாய் தாலாட்டு இசைப்பது என மூன்று வகைப்படும்.

அமெரிக்கர்கள் குழந்தைப் பாடல்களை மட்டுமல்லாமல், அவர்களது விளையாட்டையும் இணைத்து ஆய்வு நடத்துவதில் அதிகப்பொறுப்புக்கள் கொண்டுள்ளனர். அவை தொன்மையானவைகளாக இருப்பதுடன் சமய, வாழ்க்கை முறைகளைக் காட்டுவனவாகவும் கருதுகின்றார்கள்.

### மழலை மொழியில் சந்தம்

நாட்டுப்புறப் பாடல்களில் மற்றப் பிரிவுப் பாடல்களுக்கும், குழந்தைகள் பாடும் பாடல்களுக்கும் நிறைய வேற்றுமை உண்டு. குழந்தைப் பாடல்களில் வாழ்க்கை தொடர்பான பொருள் இருக்கும் என்று எதிர்பார்த்தால் அது கிடைக்காதது ஒன்றாகும்.

குழந்தைகளுக்காகத் தனிப்பட்ட பாடல்கள் எல்லா மொழிகளிலும் உண்டு, சந்தமும் ஓசையும், அவற்றின் முக்கியம். குழந்தைக்குப் புரியும்படியான எளிய சொற்களிலும் மழலைப் பேச்சிலும் அவை இருக்கவேண்டும்.

### தாலாட்டுப் பாடல்கள்

விழிகளை மூடித் தூங்குவதற்குத் தாய் தாலாட்டு இசைக்கக் காண்கிறோம். அழுது அடம்பிடிக்கும் குழந்தைகளை அடக்கும் ஆயுதமாக அன்னையரிடம் தாலாட்டு அமைந்திருக்கின்றது. இத் தாலாட்டினைத் தாய்மார்கள். ராராட்டு, ஓராட்டு என்று வழங்குவதுமுண்டு. தாலாட்டுப் பாடல்களை இரண்டாகப் பிரித்து ஆராய்வது பொருத்தமாகும். தாய்மார், தாங்கள் பரம்பரையாகவும், பிறரிடம் இருந்து அறிந்து பாடிவரும் பாடல்கள் ஒருவகை. இவ்வகைப் பாடல்களால் வளர்ந்த தமிழ்ப் புலவர்கள், அவற்றில் ஈடுபாடு கொண்டு இயற்றிய பாடல்கள் மற்றொரு வகை. வாய்மொழி இலக்கியங்களில் அதிக அழிவில்லாமல் நல்ல உருவோடு கிடைக்கும் பிரிவு, தாலாட்டுப் பாடல்களாகும். தாலாட்டின் ராகம் நீலாம்பரி என்று கூறுகின்றார்கள். இன்றைய கவிஞர்கள் தாலாட்டுப் பாடல்கள் இயற்றும் போது ஆண் குழந்தைகளுக்குத் தனியாகவும், பெண் குழந்தைகளுக்குத் தனியாகவும் பாடல்களைப் புனைகின்றனர்.

### விளையாட்டு பாடல் இசை

விளையாட்டுப் பாடல்களில் விளையாட்டின் தன்மை அடங்கியிருக்கும். இப் பாடல்களின் ஓசை. இசை இல்லாதிருந்தாலும் உரை நடையாக இல்லாமல் செய்யுள் தன்மை உடையன. விளையாட்டுப் பாடல்கள் விளையாட்டிற்குத் தக்கபடி நீண்டும் சுருங்கியும் இருக்கும்.

விளையாட்டுப் பாடல்கள் அளவில் குறும்பாடல்களானாலும் சுழற்சிக்காய் விளையாட்டுப்பாடல்கள் பெரிய பாடல்கள் எனலாம். அவை பெரிய பாடல்களாக இருப்பதற்குக் காரணம் விளையாட்டின் அமைப்பாகும்.

எண்ணுப் பாடல்கள் குழந்தைக்குச் சில பாடல்கள் பெரியவர்களால் சொல்லிக் கொடுக்கப்படும். இப்பாடல்களை அவர்கள் வெறுத்து ஒதுக்காமல் தின் பண்டங்களைச் சுவைப்பது போலத் திரும்பத் திரும்பச் சொல்லிப் பாடிக்கொண்டே இருப்பார்கள், இவ் எண்ணிக்கைப்பாட்டுக்கள் போல் பிரிட்டன், அமெரிக்கா முதலிய நாடுகளிலும் உண்டு என்றும், பிரிட்டனில் பாடப்படுபவைகளைக் கம்பர்லாண்ட் என்ற இடத்தில் ஆட்டைஎண்ணப் பயன்படுத்துவார்கள் என்றும், அப்பாடல்கள் பழமையான சில செய்திகளைத் தெரிவிப்பனவாக உள்ளன என்றும் அறிய முடிகின்றது. அறிவுப்பாடல்கள் மூலம் குழந்தைப் பாடல்களில் நீதிகள் கூறப்படுகின்றன. இப்படி நீதிகளை விளையாட்டோடு விளையாட்டாகக் குழந்தைகள் தங்கள் பாடல்களில் தங்களுக்குத் தெரியாமலேயே கற்று வருவார்கள்.

---

## வடமராட்சியிலும் சுவரொட்டிகள்

(மந்திகை)

வடமராட்சிப் பகுதியிலும் தமிழீழ விடுதலைப்புலிகளின் வரவை ஆதரித்து சுவரொட்டிகள் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.

இச்சுவரொட்டிகளில் 'மண்ணின் மைந்தர்களே தாயக மீட்புக்காக புறப்பட்ட வேங்கைகளே! பிரபாகரன் சேனைகளே வருக'

தாயக மீட்புக்காக புறப்பட்ட எம் உடன்பிறப்புக்களே, பெண் அடிமைத்தனம் உடைத்து புதிய சரித்திரம் படைத்த மகளிர் படை அணியே வருக!

போன்ற வாசகங்கள் காணப்படுகின்றன.

(செ-23)

## படையினர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கீரிமலை கேவிலில் சமய நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு அனுமதி அளிக்கும் படி கடித மூலம் விண்ணப்பம் செய்த அனைவருக்கும் பாதுகாப்பு படையினர் அனுமதி வழங்கியுள்ளதாக பலாலி பாதுகாப்புநடவடிக்கை தலைமையகம் தெரிவித்துள்ளது.

கடித மூலம் விண்ணப்பிக்காத பலருக்கு இவ் அனுமதி மறுக்க வேண்டிய நிலைமை உள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயத்தை பொதுமக்கள் சிரத்தையுடன் கடைப்பிடிக்குமாறும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(க)

---

## தம்பியை தட்டிக்கேட்டவர் வெட்டுக்கு இலக்கானார்

(மந்திகை)

சகோதரியை வெட்டிய தம்பியை தட்டக் கேட்ட அண்ணனும் தாக்கப்பட்ட சம்பவம் நேற்று முன் தினம் சனிக்கிழமை பருத்தித்துறை மாதனைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் வாள் வெட்டுக்கு இலக்கான தர்மலிங்கம் நிமலாதேவி (வயது 25) தர்மலிங்கம் விஜயகுமார் (வயது 42) ஆகிய இருவருமே காயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(செ-23)

### அனுமதிப்பத்திரமின்றி இயங்கிய

## மதுபானக் கடைகள் கண்டுபிடிக்கப்பட்டன

### பெருமளவு மதுபானங்கள் மீட்பு

(மந்திகை)

நெல்லியடிப்பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி இயங்கி வந்த நான்கு மதுபான விற்பனை நிலையங்கள் மதுவரித் திணைக்களத்தினரால் கண்டுபிடிக்கப்பட்டு பெருமளவிலான மதுபானங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் சட்டவிரோதமான மதுபான விற்பனை நிலையங்கள் இயங்கி வருவதாக பொதுமக்களும், பொது அமைப்புக்களும் கொழும்பிலுள்ள தலைமை அலுவலகத்திற்கு செய்த முறைப்பாட்டினை அடுத்தே, மதுவரித் திணைக்கள உதவி ஆணையாளர் தலைமையிலான குழு திடீர் சோதனைகளை மேற்கொண்டு இவ் விற்பனை நிலையங்களைக் கண்டுபிடித்தது.

மேற்படி நான்கு விற்பனை நிலையங்களுக்கு எதிராக விரைவில் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் மதுவரி திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (செ-23)

## இடமாற்றம்

(மந்திகை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் பிரதம மருந்தாளராகக் கடமையாற்றி வந்த சிவசோதிமகிந்தலாஏப்ரல் 1ஆம் திகதி தொடக்கம் கோப்பாய் அரசினர் மருத்துவ மனையில் பணியாற்றுவதற்கு இடம் மாற்றலாகியுள்ளார்.

அந்த மருத்துவமனையில் பணியாற்றி வரும் எஸ். ஆறுமுகம் இவரது இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளார். (எ-23)

## என்குருவே வாழிய நீர் பன்நூறாண்டே

செந்தமிழில் இலக்கியத்தில் இலக்கணத்தில்<br>
செறிபுலமை மூதறிஞர் முதுகலை மாணி<br>
சிந்தழகுப் பேச்சாலே வாதத் தாலே<br>
தெளிந்துஇலக் கியநயங்கள் செப்பும் பாங்கில்<br>
சிந்தையது சொக்கி நின்றோ சொக்கனுக்குச்<br>
சிறந்தகலா நிதிவிருதை ஈந்து வந்தார்<br>
எந்தமது மண்ணுக்கே ஏற்றந் தந்த<br>
என்குருவே வாழியநீர் பன்நூ றாண்டே

**நாயன்மார்கட்டு இராசையா குகதாசன்**

---

## யாழ்ப்பாணத்துக் கல்வியால் தமிழர் உலகில் தலைநிமிர்ந்து நிற்கிறார்கள்

### யாழ். பல்கலை துணைவேந்தர்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மக்கள் இன்று உலகின் பல பகுதிகளில் தலை நிமிர்ந்து வாழ்ந்து வருகின்றனர். ஐரோப்பியர்களுக்குச் சமனாக முன்னேறி வருகின்றனர். இதற்குக் காரணம் யாழ்ப்பாணத்துக் கல்வியே.

இவ்வாறு யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் முற்பகல் வீரசிங்கம் மண்டபத்தில் தகவல் தொழில்நுட்ப பூங்கா இயக்குநர் கே. நந்தகுமார் தலைமையில் நடைபெற்ற தகவல் தொழில்நுட்ப பூங்கா மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் விசேட விருந்தினராகக்கலந்து கொண்டு உரையாற்றிய பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் தொடர்ந்து பேசியதாவது;

### தமிழ்நாடு

ஆசியாவில் தகவல் தொழில் நுட்பத்துறையில் அதிக முதலீடு செய்யப்படும் இடமாக தமிழ்நாடு விளங்குகின்றது.

கடந்த காலயுத்த சூழ்நிலை எமது பல பின்னடைவிற்கு காரணமாகிவிட்டது. எனினும் இன்றைய காலகட்டத்தில் கணனி பயில்வதற்கு சாதகமான ஒரு சூழ்நிலை இங்கு காணப்படுகிறது. கொழும்பில் உள்ள நவீன வசதிகள் யாழ்ப்பாணத்திற்கும் வரத்தொடங்கியுள்ளன.

தற்போது வீட்டில்பொழுது போக்கும் முக்கிய இலத்திரனியல் சாதனங்களில் கணனியும் சிறப்பிடம் பெறுகிறது அத்துடன் எமது முன்னைய சந்ததியை விட தற்பொழுது உள்ள சந்ததி கணனித்துறையில் கூடிய ஆர்வம் செலுத்துவது வரவேற்கத்தக்கதாகும்.

### கணனி மயப்படுத்தல்

தற்பொழுது யாழ்ப்பாணத்தில் உள்ள நிறுவனங்கள் கணனி மயப்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக வங்கித்துறை கணனி மயமாகி வருகின்றது. அதைவிட தனியார் துறையைச் சேர்ந்த பல நிறுவனங்களும் கணனி மயப் படுத்தப்படுகிறது.

எனவே நாம் கணனி யுகத்திற்கு எம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ளவேண்டும். குறிப்பாக ஆளணியினர் வளத்தைக் கட்டியெழுப்பவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் நாம் வேறு இடங்களிலிருந்து ஆளணியினரைக்கொண்டு வர வேண்டிய நிலை ஏற்படும்.

உலகம் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. அந்த முன்னேற்றத்திற்கு நாமும் ஈடுகொடுக்க வேண்டும். எனவே எமது இன்றைய சந்ததியினர், கணனி அறிவையும் ஆங்கில அறிவையும் விருத்தி, செய்து கொள்ள வேண்டும்.

அவ் விழாவில் உயர் பட்ட படிப்புத்துறை பேராசிரியர் அ.சண்முகதாஸ் உரையாற்றுகையில்:-

இன்றைய உலகில் ஆங்கில மொழி இணையத் தளங்களுக்கு அடுத்த படியாக அதிகளவு இணையத்தளங்கள் தமிழிலேயே காணப் படுகின்றன.

இன்றைய கால கட்டத்தில் ஆங்கில மொழி நவீன உலகிலே இன்றியமையாததாகி விட்டது. கணனித்துறை, பொறியியற்றுறை ஆகியவற்றில் இதே நிலைதான் காணப் படுகின்றது. எனவேஆங்கிலத்திற்கு நிகராக தமிழ் வளர்ச்சியடைய வேண்டும்.

### தமிழ் ஆங்கில மூலம்

யாழ்ப்பாணத்துப் பிள்ளைகள் தமிழ் மூலமும் ஆங்கிலம் மூலமும் கணனித்துறையைப் பயில்வதே சிறப்புக்குரியதாகும். எது எவ்வாறு இருப்பினும் ஆங்கில மொழி மிக அவசியமான தொன்றாகும்.

தமிழர்களின் பெருமைகளை உலகறியச் செய்ய வேண்டுமென்றால் கணனித் துறையிலும் நாம்நிலையாகக் கால்பதிக்க வேண்டும். இனி வரும் பாதை திறப்பை நாம் அதற்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

யாழ்ப்பாணம் முற்றாக கணனி மயப்படுத்தப்பட்டால் சில பிரச்சினைகளையும் நாம் எதிர்கொள்ளவேண்டியிருக்கும்.

முதலாவது பிரச்சினை வேலைவாய்ப்பின்மை இன்று சகல துறையையும் உள்ளடக்கிய பல பட்டதாரிகள் வேலையில்லாத நிலையிலே இருக்கின்றார்கள்.

அத்துடன் பலர் வேலையை இழக்கும் ஆபத்திலும் இருக்கின்றார்கள்.

அத்துடன் இன்றைய சூழ்நிலையிலே பலர் கணனியைக் கற்காமல் ஒதுங்கி வாழ்கின்றார்கள், இந்நிலை மாற வேண்டும். வயது வித்தியாசமின்றி அனைவரும் கட்டாயமாக கணனிக்கல்வியைப் பெறவேண்டும் என்றார்.

இந் நிகழ்விலே கணனிக் கல்வியைப் பெற்ற இருநூற்றுப்பத்து மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டன.

(எ-19)

# யாழ்ப்பாணத் திட்டத்தினால் பயனில்லை

# அபிவிருத்தி அதிகாரசபையை அமைக்குக

## மனிதநேய அமைப்புக்கள் பிரதமரிடம் கோரிக்கை

(தென்மராட்சி)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தி புனர்வாழ்வு நடவடிக்கைகளை முழுமையாக திட்டமிட்டுசெய்வதற்கு ஏதுவாக வடக்கு-கிழக்குஅபிவிருத்திஅதிகார சபை, எனும் புதிய அமைப்பு ஒன்றினை அரசாங்கம் அமைக்க வேண்டும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட மனித நேய அமைப்புகளின் ஒன்றியம் அரசாங்கத்தைக் கோரியுளது.

இதுபற்றி அந்தஒன்றியத்தின் தலைவர் எஸ்.பரமநாதன் தெரிவிக்கையில்,

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கடந்த இருதசாப்தங்களாக இடம் பெற்று வந்துள்ள யுத்தத்தினால் அனைத்துத் துறைகளுமே அழிக்கப்பட்டு விட்டன.

அவற்றினை மீளவும் கட்டியெழுப்பி, மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு உதவவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். அரைகுறைத் திட்டங்களோ அல்லது அவசர திட்டங்களோ எமது மக்களுக்குத் தேவையில்லை முழுமையான அபிவிருத்தித் திட்டமே தேவையாகும்.

குறிப்பாக 1998இல் ஏகப்பட்ட நிதிச்செலவில் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாணத் திட்டத்தினால் எத்தகையநன்மைகளும் மக்களுக்குக் கிடைக்கவில்லை. தற்போது தயாரிக்கப்பட்டு வரும் யாழ்ப்பாணத் திட்டம் முழுமையான திட்டமாக இருக்கவேண்டும். புதிய சட்டதிட்டங்கள் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும்.

நாடு சுதந்திரமடைந்ததன் பின்னர் யாழ்ப்பாணம், நாட்டில் இரண்டாவது இடத்தில் இருந்தது. ஆனால் தற்போது யாழ்ப்பாணம் பதினாறாவது இடத்துக்குத் தள்ளப்பட்டு விட்டது இந்த நிலை மாற்றப்பட்டு, யாழ்ப்பாணத்தை நாட்டின் முதலாவது இடத்துக்குக் கொண்டு வரவேண்டும்.

நாட்டின் அபிவிருத்திபுனர்வாழ்வுத் திட்டத்தில் உள்ளூராட்சிக்கு முக்கியபங்களிப்பு வழங்கப்படல்வேண்டும். மின்சாரம், வீதிகள்மற்றும் குடிநீர் பிரச்சினைகளுக்கு முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இவற்றின் முதற்கட்டமாக யாழ்ப்பாணம்- கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்- பலாலி வீதி, யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்-தீவகவீதி, யாழ்ப்பாணம்-கண்டி வீதி ஆகிய பிரதான வீதிகள் புனரமைப்புச் செய்யப்படல் வேண்டும்.

மேலும் அபிவிருத்தி, புனர்வாழ்வுத் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு இலகுவான முறையாக வலயரீதியிலான செயற்பாடுகளே கூடுதலான நன்மை பயக்கும் எனவும் அவர் தமது கோரிக்கையில் குறிப்பிட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (உ-77)

## பற்சிகிச்சை முகாம் இன்று

(யாழ்ப்பாணம்)

நூறு நாள் புரட்சிகர வேலைத் திட்டத்தின் கீழ் புனர்வாழ்வு, புனர் நிர்மாண அகதிகள் பராமரிப்பு அமைச்சர் டாக்டர் ஜபலத் ஜெயவர்த்தனாவினால் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்படும் வசதி குறைந்தவர்களுக்கான இலவச மருத்துவ, கண் சிகிச்சை, 10 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களுக்கான பற்சிகிச்சை முகாம் இன்று காலை 9.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

இம் முகாமிற்கு மாவட்டம் (306) பி, பிராந்தியம் IV வலயம் II இன் கழகங்கள், கோப்பாய் லயன்ஸ் கழகம் ஆகியன ஆதரவு வழங்குகின்றன. (க-03)

### தமிழ் மக்களினுடைய

# கோரிக்கைகளை நிறைவேற்ற ஐ. தே. மு. பாடுபட்டு வருகின்றது

### பிரதமர் ரணில் உரை

(கொழும்பு)

தமிழ் மக்களின் கோரிக்கைகளை புரிந்துகொண்டு அவற்றினை நடைமுறைப்படுத்துவதற்காக ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பாடுபட்டு வருகின்றது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சுதந்திர சதுக்கத்தில் அண்மையில் நடைபெற்ற மறைந்த முன்னாள் பிரதமர் டி. எஸ். சேனநாயக்காவின் 50 ஆவது நினைவு தின வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்;

நாட்டில்தேசியப் பிரச்சினையாகவுள்ள இனப்பிரச்சினைக்குத்தீர்வுகாணும்ஒருவழி பேச்சுவார்த்தைதான். அதற்காகவே யுத்தநடவடிக்கைகளை விடுத்து சமாதான வழிகளை ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கம் பின்பற்றி வருகின்றது.

டி. எஸ் சேனநாயக்கா பின் பற்றிய கொள்கைகளையும், கோட்பாடுகளையும் கைவிட்டதனாலேயே நாட்டில் இனங்களுக்கிடையே ஒற்றுமை குறைந்து வேற்றுமைகள் வேரூன்றிநிற்கின்றன.

எனவே, அவரின் இத்தகைய கொள்கைகளையும், கோட்பாடுகளையும்மீண்டும்கடைப்பிடிப்பதனூடாக தமிழ் மக்களின் கோரிக்கைகளினை புரிந்து கொண்டுநிறைவேற்றி நாட்டில்சமாதானத்தைநிலை நாட்டமுடியும் எனவும் தெரிவித்துள்ளார். (உ-8)

## உணவல்லாத பொருள் உதவி

(முல்லைத்தீவு)

யூ. என். எச். சி. ஆர் போருட் நிறுவனங்களின் அனுசரணையுடன் முல்லை அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினரால் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் மிகவும் வறிய நிலையில் உள்ள 70 குடும்பங்களுக்கு அண்மையில் உணவல்லாத பொருட்கள் வழங்கப்பட்டன. (வ)

## பாடசாலை மாணவன் சரீரப் பிணையில் விடுதலை

(மீசாலை)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கடந்த வருடம் வல்வெட்டித்துறையில் கைது செய்யப்பட்ட பாடசாலை மாணவன் ஒருவன் கடந்த 21 ஆம் திகதி யாழ். நீதிமன்ற நீதிவானால் சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

தென்மராட்சிப் பகுதியில் இடம் பெற்ற யுத்த அனர்த்தம் காரணமாக இடம் பெயர்ந்து வல்வெட்டித்துறையில் வசித்த வேளையிலேயே பிரஸ்தாப மாணவன் கைது செய்யப்பட்டார்.

இவரது கைது குறித்த காரணங்கள் எதுவும் இது வரையில் தெரிவிக்கப்படவில்லை. (க-229)

## பொலிஸாருக்கு எதிராக ஜனாதிபதி முறைப்பாடு

(கொழும்பு)

குற்றச் செயல்களில் ஈடுபட்ட 900இற்குப் மேற்பட்ட பொலிஸாரை அந்த குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுவிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஜனாதிபதி குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்காவுக்கு ஜனாதிபதி கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார். அந்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாது:

1994 ஆம் ஆண்டு பொது ஜன ஐக்கிய முன்னணிஅரசினால்அறிமுகப் படுத்தப்பட்ட ஜனநாயக அரசியல் கலாசாரம் மற்றும் நீதிமன்றங்களின் மந்தமான செயற்பாடுகள் காரணமாக பலகுற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்ட 900 இற்கும் மேற்பட்ட பொலிஸார் தொடர்ந்தும் கடமையில் உள்ளனர்.

இவர்களுக்குஎதிரானசட்ட நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை.

இனிவரும்காலங்களிலாவது பொலிஸாரினது பக்கச்சார்பற்ற சேவையினை பெற்றுக்கொடுக்க உள்துறை அமைச்சர் முயற்சி மேற் கொள்வாரா என்று ஜனாதிபதி அந்த கடிதத்தில் கேள்வி எழுப்பியுள்ளார். (க-5)

## ஆடைத் தயாரிப்பு நிறுவனத்தின் கிளை யாழில் அமையும்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள பெயார் லைன் ஆடைத் தயாரிப்பு நிறுவனத்தின் கிளையொன்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நிறுவனத் தலைவர் தெரிவித்துள்ளார்.

நூறு நாள் வேலைத்திட்டத்தின் கீழ், ஆரம்பிக்கப் படவுள்ள இத்திட்டத்தின் மூலம் 500 பேருக்கு தொழில் வாய்ப்பு வழங்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (உ-3)

## கரணவாயில் கல்யாண மண்டபம்

(கல்வயல்)

கரவெட்டி, கரணவாய் மூத்த விநாயகர் ஆலயவடக்கு வீதியில், பல லட்ச ரூபா செலவில், நவீனவசதிகளுடன் கூடிய கல்யாண மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

இம்மண்டபம் விரைவில் பூர்த்தி அடையும் என்றும் கல்யாண நிகழ்வுகள் மட்டுமன்றி பொது நிகழ்வுகள் பலவும் நடத்தக்கூடியதாக இருக்கும் என்றும் ஊர் பிரமுகர்கள் பலர் தெரிவித்துள்ளனர். (க-111)

## இந்துசாதனம் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சைவ பரிபாலன சபையினரால் வெளியிடப்படும்' இந்துசாதனம், மாசி மாத இதழ் வெளியிடப்பட்டுள்ளது. (செ)

### சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு

## வீடு கட்டுவதற்கு இரண்டு இலட்சம் கடன்

(நுவரெலியா)

சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கும் விவசாய உத்தியோகத்தர்களுக்கும் வீடு கட்டுவதற்கான 2இலட்சம்ரூபா கடன் வழங்கவும், மோட்டார்சைக்கிள் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுத்துவருவதாக சமுர்த்திஅமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நுவரெலியா புதிய நகரமண்டபத்தில் நடைபெற்ற சமுர்த்தி விவசாய உத்தியோகத்தர்களுக்கான கூட்டத்தில் இதனை தெரிவித்த அவர் இன்னும் இருவருடங்களில் இது அமுல்படுத்தப் படும் என்றார். (உ)

## நீர் இறைக்கும் இயந்திரங்கள் அன்பளிப்பு

(மீசாலை)

சாவகச்சேரி நகரசபைக்கு 'றான்' அமைப்பு ஐந்து நீர் இறைக்கும் இயந்திரங்களை அன்பளிப்புச் செய்துள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள சுமுக நிலையை அடுத்துதென்மராட்சிக்குதிரும்பியுள்ளமக்களின் வீட்டு கிணறுகளை சுத்தம் செய்வதற்காகவே இந் நீரிறைக்கும் இயந்திரங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இதேவேளையில் சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்கும் விரைவில் பத்து நீர் இறைக்கும் இயந்திரங்கள் 'றான்' அமைப்பினால் வழங்கப்படவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப் படுகிறது. (க-229)

## இளைஞர் யுவதிகளுக்கு மாதாந்தம் 2 ஆயிரம் ரூபா வழங்க அரசு தீர்மானம்

(கொழும்பு)

வேலை வாய்ப்பற்ற இளைஞர் யுவதிகளுக்கு 2000 ரூபாவை மாதாந்தம் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இவ்வருடத்திலிருந்து அமுல் செய்யப்படும் இத்திட்டத்தினை ஐக்கிய தேசியகட்சியினர் கடந்தபொதுத்தேர்தல் வாக்குறுதியாக 'வழங்கியிருந்தனர் இத்திட்டத்திற்குத் தேவையான நிதிதிறைசேரியினால் ஒதுக்கப்பட்டுள்ளது.

இளைஞர், யுவதிகளுக்கான தொழிற்பயிற்சி நிறுவனங்களும் ஆரம்பிக்கப்படவுள்ளன. (உ-8)

யோகர்சுவாமிகளின் குருபூசைத்தினம் இன்று

## எங்கள் குருநாதன்

எங்கள் குருநாதன் எழில் நல்லை வாசன்
அல்லும் பகலும் நல்லை வீதியில்எங்கள் குருநாதன்
தேரடிச் சித்தர் செல்லப்பரின் சீடர்
அன்பர் சகாயன் எங்கள் குருநாதன்
பஞ்சாமிர்தம் போல் பண்புடன் இனிப்பான்
அன்னை பிதா குருவானான் எங்கள் குருநாதன்,
வஞ்சம், பொறாமை வைத்திடும் மாந்தர்க்கு
அஞ்சாதே என்றருளும் எங்கள் குருநாதன்,
ஒரு பொல்லாப்பும் இல்லை என்றான்
முழுதும் உண்மை என்றான் எங்கள் குருநாதன்
எப்பவோ முடிந்தது என்றான் - நாம்
ஒன்றும் அறியோம் என்றான் எங்கள் குருநாதன்
கொழும்புத்துறை எனும் ஊரில்
இலுப்பை மரத்தடி வேரில் எங்கள் குருநாதன்,
அறிவாளர், மந்திரிமார் பலரும்
ஆசி பெற்று செல்லும் எங்கள் குருநாதன்,
அச்சமொடு கோபமில்லா, ஆணவத்தை
நீக்கி விட்ட எங்கள் குருநாதன்,
பச்சைப் புரவியிலே பாங்காக ஏறு
என்று உறுதி மொழி சொன்னான் எங்கள் குருநாதன்,
நாட்டில் சமாதானம் நிலவ நல்ல
வழிகாட்டி நிற்பான் எங்கள் குருநாதன்,
அன்புடனே நாளும் தொழும் எங்கள் குருநாதன்.

செந்தில்குமரன்-ஐங்கரன்
கொழும்புத்துறை

## இன்று ஒரு தகவல்

# நம் இனமே நமக்கு எதிரி

இறைவனின் படைப்பில் நட்பு எந்தளவுக்குப் பெறுமதியானதோ அந்தளவுக்குப் பகைமையும் கனதியானதே. இது மனிதர்களுக்கு மட்டுமன்றி எல்லா உயிரினங்களுக்கும் சாலப் பொருந்தும். பாம்புக்குப் பகை கீரி என்றும், எலிக்குப் பகை பூனை என்றும் சொல்லக் கேட்டிருக்கிறோம். அனுபவத்தால் உணர்கிறோம். சில சந்தர்ப்பங்களில் பாம்புக்குப் பகை பாம்பாகவும், பூனைக்குப்பகை பூனையாகவும் அமைவதுண்டு. இவை உயிரினங்களாயினும், அவை வெவ்வேறு வகையின என்பதில் திருப்தியடைவோம். மாறாக ஆறறிவு கொண்ட பிறவியாகச் சிருஷ்டிக்கப்பட்ட மனிதனிடமும் கூட மனிதனுக்கு மனிதன் எதிரியாக இருப்பது அருவருக்கத்தக்கது. குடும்பம், வருமானம், சொத்து விடயங்களில் அண்ணனுக்கும் தம்பிக்குமிடையேயும் நண்பனுக்கும் நண்பனுக்குமிடையேயும் கணவனுக்கும் மனைவிக்குமிடையேயும், உறவுக்கும் உறவுக்குமிடையேயும், கூட பகைமை உணர்வுகள் யதார்த்தத்திலுள்ளன. சில விடயங்களில் இது வெளிப்படையாகவும் பல விடயங்களில் உள் பொருளாகவும் தெரிவதுண்டு. இங்கே போட்டி நிலை பொறாமையின் பிறப்பிடத்துக்குக் கருவாகவும் அமைவதுண்டு. இதை நீக்கப் பல்துறை சார்ந்தோர் முயற்சித்த போதும் இந்நிலை இன்றும் மாறவில்லை. இனியும் மாறப் போவதில்லை. காரணம் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை மிகத் தூரத்தே தெரிகிறதேயன்றி, அது எட்ட முடியாத இலக்கல்ல என்பதை நாம் அங்கீகரிக்காமையேயாகும்.

குடும்பத்தினரிடையே காணப்படும் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு இன்று வரை இழுபறி காணப்படுகின்றதென்றால் இனங்களுக்கிடையே மாறாக நாடுகட்கிடையே காணப்படும் பிரச்சினைகளை விடுவிப்பதில் எவ்வளவு முரண்பாடுகள் இருக்கும் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ஒரு குடும்பத்தில், ஒரு கிராமத்தில் இனங்களுக்கிடையே நிலவும் ஒற்றுமைக் குறைவும் எதிர்ப்பும் எல்லா உயிரினங்களிலும் உண்டு என்பதை விளக்க ஒரு கதை.

யாழ்ப்பாணத்திலுள்ள கிராமத்து நாய்கள் சில கதிர்காமத்திற்குப் பாதயாத்திரை சென்று இறைவனைத் தரிசித்து வர விரும்பின. இவ்வாறாகப் பாதயாத்திரை செல்லும் அடியார்கள் கூட்டத்துடன் இவைகளும் மெதுவாக நடந்து சென்றன. செல்லும் வழி காட்டு வழியாக இருந்த போதும் கூட வழியிலுள்ள பல கிராமங்களையும் குடியிருப்புகளையும் சந்திக்க நேர்ந்தது. அடியார்கட்கிருந்த வரவேற்பு இவைகளுக்கும் இருந்தன. மாறாக அவ்விடத்துள்ள நாய்களே இவைகளை விரட்டிக் கடித்தன. நிம்மதியாகத் தூங்க விடவில்லை. ஒய்வு எடுக்குமிடங்களிலும் அமைதியில்லை. அச்சத்துடன் பொழுதைக் கழிக்க வேண்டிய நிலையே காணப்பட்டது இவ்வாறாகப் பலத்தசிரமத்துடன் கதிர்காமத்தைச் சென்றடைந்தன. அங்கேயும் இவைகளுக்கு இதே கதிதான்.

ஒரு மாதிரியாக மிக்க மனவருத்தத்துடன் தம்மைச் சுதாகரித்துக்கொண்ட நாய்கள் நீண்ட நாட்களின் பின் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தன.

சற்று மெலிந்து, பயணக் களைப்புடன், சோகத்துடன் சோர்ந்து படுத்திருந்த இவைகளைச் சந்திக்க செய்தியை அறிந்த ஊர் நாய்கள் வந்தன. குசலம் விசாரிக்க வந்த நாய்களுள் ஒரு கிழ நாய் எப்படியப்பா உங்கள் கதிர்காம யாத்திரை என்று கேட்டது. யாத்திரை சென்று வந்த நாய் ஒன்று பெரியவரே யாத்திரை நல்ல யாத்திரை. ஆனால், நாங்கள் சென்ற இடம், தங்கிய இடமெல்லாம் நம் இனமே நமக்கு எதிரி என்று வெட்கத்துடனும் துக்கத்துடனும் கூறியது.

இதுபோன்ற நிலையிலே காணப்படும் மனித வாழ்வைத் தூய்மைப்படுத்தி மகிழ்வோடு ஒற்றுமையாக வாழ்ந்திடத் திட சங்கற்பம் பூணுவோம்.

மு. விக்னேஸ்வரன்
கோப்பாய்

## அரசு- புலிகள் சமாதானப் பேச்சு

# தாய்நாட்டிலா? வெளிநாட்டிலா?

# இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை

## டிரோன் பெர்னாண்டோ தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழவிடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்துக்குமிடையே சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான இடம் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என வெளிவிவகாரஅமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்றசெய்தியாளர்மா நாட்டில்கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தாய் நாட்டிலா அல்லது வெளிநாட்டிலா இப்பேச்சுவார்த்தைகள் இடம் பெறும் என்ற கேள்விக்கு பதிலளித்த அமைச்சர்,

இராஜதந்திர மட்டத்திலானபேச்சுக்கள் ஆரம்பமான போதிலும் சுதந்திரமான பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கான இடம் தீர்மானிக்கப்படவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் நாடு திரும்புவதில் தடைஎதுவும்அரசுக்கு இல்லை எனத் தெரிவித்தார். (உ-8)

# தமிழ்க்கல்வி புதுச் சந்ததியால் புறக்கணிக்கப்பட்டு வருகின்றது

## தமிழ்த்துறைத் தலைவர் வேதனை

(யாழ்ப்பாணம்)

தமிழ்க் கல்வி, புதுச் சந்ததியால் புறக்கணிக்கப்பட்டு வருகின்றது.

தமிழை மாணவர்கள் ஒரு பாடமாக மட்டுமே கற்கிறார்கள். அதன்மீது பற்றுதல், அபிமானம் என்பன குறைவடைந்து வருவது வேதனைக்குரிய விடயமாகும்.

பலாலி ஆசிரியர் கலாசாலையின் தமிழ்த்தினவிழா, கடந்த வெளிக்கிழமை. பாலகணேசன் தலைமையில் நடைபெற்றபோது, நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராசா இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் பேசுகையில்,

இளைய சமுதாயத்தின் தமிழ்க் கல்விக்கு நல்லதோர் அத்திபாரம் இடப்படுதல் வேண்டும். அத்துடன் கற்கும் போது கசடறக் கற்கும் வகை செய்தல் வேண்டும்.

வாசிப்பு என்பது உன்னதமான ஒரு பொழுது போக்கு. வாசிப்பு தவிர்ந்த ஏனைய பொழுது போக்குகளில் ஈடுபடுவது அதிகரித்து வருவது தான் தமிழ் அபிமானம் குறைவடையக் காரணம்.

தற்போதைய பாடத்திட்டம் மாணவர்களுக்கு மனச் சுமையைமட்டுமே ஏற்படுத்துகிறது. மாறாக அவர்களது திறன்களை வளர்க்கவில்லை என்று குறிப்பிட்டார். (உ-19)

## அமைச்சர் இன்று யாழ் விஜயம்

(கொழும்பு)

உள் நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் குணசேகரா இருநாள் விஜயத்தை மேற்கொண்டு இன்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

இங்குவரும் அமைச்சர் யாழ். குடாநாட்டு மக்களினதும் மீளக் குடியமரவுள்ள மக்களினதும் தேவைகள் குறித்து ஆராயவுள்ளதாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-05)

## திருட்டு சந்தேகக் கைதி மதிலால் ஏறி ஓட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் பத்திற்கு மேற்பட்ட திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டார்என்றுகைது செய்யப்பட்டவர் நீதிமன்றிலிருந்து விளக்க மறியலில்வைப்பதற்காக பொலிஸாரால் கூட்டிச் செல்லப்பட்டபோது சிறைச்சாலை மதிலால் ஏறித் தப்பிச் சென்றுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற இச்சம்பவத்தைத் தொடர்ந்து சிறைக் காவலர்களும் பொலிஸாரும் கூட்டாக இணைந்து மட்டக்களப்பு நகரில் தேடுதல் நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

எனினும், இதுவரை மேற்படி சந்தேக நபர் கைது செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டபோது அவரிடமிருந்து 43 பவுண் தங்க நகைகள், கமெரா என்பன கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை அவர் மட்டக்களப்பு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது ஏப்ரல்5ஆம்திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டிருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ-5)

## யோகர் சுவாமி குருபூஜை தின நிகழ்வுகள்

(கொழும்புத்துறை)

சிவயோகர் சுவாமிகளின் குருபூஜையை முன்னிட்டு கொழும்புத்துறை மேற்கு வதரிபீட விநாயகர் ஆலய பூங்கொல்லையிலுள்ள சிவயோகர் சுவாமிகளின் திருவடிக் கோவிலில் இன்றுபி.ப. 3.30மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று நற்சிந்தனை படிப்பும் இடம் பெறவுள்ளது. (செ-223)

● ● ●

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறையிலுள்ள சிவயோகர் சுவாமிகளின் சமாதிக் கோவிலில் இன்று காலை 8-00மணிக்கு விஷேட பூஜைகள் நடைபெறவுள்ளது. (செ-223)

● ● ●

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில்இன்று யோகர் சுவாமிகளின் குருபூஜை நிகழ்வுகளும், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆசிரியர் செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகனின் சிறப்புச் சொற்பொழிவும் இடம் பெற்று அதனைத் தொடர்ந்துமகேஸ்வர பூசையும் இடம் பெறவுள்ளது. (செ-223)

## 912 தேர்தல் வன்முறைகள்

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலின் போது 912 தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றதாக தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது வரையில் 398 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (க-05)

## இன்று திறப்பு விழா

சுன்னாகத்தில்நிறுவபபட்ட விவசாய விளை பொருள் பழவகை பதனிடல்கட்டிடதிறப்பு விழா இன்று 25 ஆம்திகதி காலை 9.00 மணிக்கு இடம் பெறவுள்ளது.

புனர் வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா பிரதம விருந்தினராக கலந்து கொள்ளும் இந்நிகழ்வில் பெருமளவு மக்கள் கலந்து சொள்ள உள்ளனர்.

சுன்னாகம் ப. நோ. கூட்டுறவு சங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் மேற்படி பழப்பதனிடல் மற்றும் விவசாய விளைபொருள் விற்பனை இடம் பெறவுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. (க-49)

## பஸ் சேவை மாற்றம் பயணிகள் சிரமம்

(கல்வயல்)

பருத்தித்துறையிலிருந்து தினசரி காலை 7.30 மணிக்கு சாவகச்சேரி செல்லும் 765 ம் இலக்க பேருந்து சேவை காலை 7.10 க்கு மாற்றப்பட்டுள்ளதால் இவ்வீதி ஊடாக பயணம் செய்யும் பாடசாலை மாணவர் பெரிதும் சிரமமுறுவதாக மாணவர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது

வலிகாமம் மற்றும் வேறு இடங்களிலிருந்து பருத்தித்துறை ஊடாக இம்மாணவர்கள் பயணம் சாவகச்சேரி நோக்கிப் பயணிப்பதால் புதிய நேரமாற்றத்தால் குறிப்பிட்ட பஸ்ஸில் பயணிக்க முடியாமல் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-111)

## கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சுகாதாரபிரிவு

(கொழும்பு)

வெளிநாடுகளில் தொழில் புரிந்துவிட்டு இலங்கை திரும்பும் இலங்கையர்களின் நன்மை கருதி கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சுகாதாரப்பிரிவு ஒன்று ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாக தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

சுகவீனம் மற்றும் அங்கவீனமுற்று நாடு திரும்பும் இலங்கையர்களுக்கு மருத்துவ வசதிகளை இந்த சுகாதாரப் பிரிவு வழங்கவுள்ளது.

மத்திய கிழக்கில் பணிப் பெண்களாக பணி புரிந்துவிட்டு நாடு திரும்பும் பணிப் பெண்களின் நன்மையைகருத்திற் கொண்டே இப்பிரிவு ஆரம்பித்துவைக்கப்பட்டதாக விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-03)

## இளங்கலைஞர் மன்றத்தில் இன்று

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்ற வருடாந்த இசைவிழாவின் மூன்றாம் நாளான இன்று மாலை 3.30மணி முதல் மங்கள இசை, வயலின்இசை, பாட்டு வீணை இசை, இசைக்கச்சேரி நடனாஞ்சலி, கிராமிய நடனம் என்பன இடம் பெறவுள்ளன. (க-3)

## சிந்தனைக்கு விருந்து

### கருத்தினில் அரசு கொள்ளாதோ?

உயிர் உளம் உடல்கள் யாவையும் சிறையில்
ஒய்விலா துழன்றிடக் கண்டும்
தயவெதும் இன்றிக் கல்மனத் துடனே
தமிழ் இளம் ஆண்கள்பெண் களினைத்
துயர்கட லினிலே ஆழ்த்தியே வைத்துத்
தொடர்ந்துபெற் றோரையும் வருத்தும்
கயமையை ஒழிப்ப தென்றினி யேனும்
கருத்தினில் அரசுகொள் ளாதோ?

'பழையவன்'

### இந்திய-பாக் எல்லைப்பகுதியில்

## கடந்த வெள்ளி முதல் தொடர் துப்பாக்கி மோதல்

(புதுடில்லி)

இந்திய-பாகிஸ்தான் எல்லைக் கோட்டுப் பகுதியில் இரு நாட்டுப் படைகளும் கடும் துப்பாக்கி மோதலில் ஈடுபட்டு வருகின்றன.

கடந்த வெள்ளி முதல் இம் மோதல் இடம்பெற்று வருவதாகவும் துப்பாக்கிச் சத்தங்கள் தொடர்ச்சியாக கேட்ட வண்ணம் உள்ளதாகவும் அப் பகுதி வாழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

லீகல், சத்வால், சவாலி போன்ற இடங்களிலேயே இம்மோதல்கள் இடம்பெற்று வருவதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## வறிய நாடுகளுக்கு நிதி உதவி வழங்க தீர்மானம்

(வாஷிங்டன்)

மெக்ஸிக்கோவில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற உலக வறுமைக்கு எதிரான சர்வதேச மாநாட்டில் ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் வறிய நாடுகளுக்கு நிதியுதவி வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் வறுமையால் வாடும் கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தவும் அந் நாடுகளின் பற்றாக்குறை நிதியினை நிவர்த்தி செய்து வர்த்தகத்தினை மேம்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இம் மாநாட்டில் அறுபது நாடுகள் பங்கு பற்றின. (செ)

# யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவர யூனிற்றா அமைப்புடன் பேச்சு

### பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

(மட்றிட்)

அங்கோலாவில் கடந்த 27 வருடங்களாக இடம்பெற்று வரும் உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரும் முகமாக யூனிற்றா கெரில்லாக்களுடன் பேச்சுவார்த்தை நடத்திவருவதாக பாதுகாப்பு அமைச்சர் குந்தி பயமா அறிவித்துள்ளார்.

இதேவேளை, பல அழுத்தங்களுக்கு மத்தியிலேயே யூனிற்றா கெரில்லாக்கள் பேச்சுவார்த்தைகளுக்கு சம்மதித்திருப்பதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்களை பாதுகாப்பு அமைச்சர் மறுத்துள்ளார்.

யூனிற்றா கெரில்லாக்களின் ஆயுதங்களை களைவது குறித்தே தற்போது பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

யூனிற்றா கெரில்லா இயக்கத் தலைவர் அரசபடையினரால் கடந்த மாதம் கொலை செய்யப்பட்டதை அடுத்தே உள்நாட்டு யுத்தம் முடிவடைதற்கான சாதகமான நிலை தோன்றியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-03)

## ஆறுமுகநாவலரால்.....

களில் 65 தொகுதிகளாக உள்ள அவன் கற்றோர் ஏத்தும் ஞானக்களஞ்சியமாவான்.

**திருவடி வழிபாடு**

வண்ணை வைத்தீஸ்வரர் பெருமாளு நல்லூர் சோதிப்பிகாச வேலவரும் வீற்றிருக்கும் இரு புண்ணிய தலங்களுக்கும் இடையே 1953ம் ஆண்டு யாழ் சிவதொண்டன் நிலையம் உருவாகியது. அதனை தியானம் செய்து கடைத்தேறுதற்கான ஞானப் பண்ணையாக சுவாமி நிறுவினார்.

சிவதொண்டன் நிலையத்-திற் சேரீர்
தியானம் செய்து கடைத்-தேறீர்
மௌனமாய்இருந்து இளைப்-பாறீர்
மந்திரம்இதுவெனக்குறியீர்

என்பது சிவதொண்டன் நிலையச் சாசனம். மௌனமாக இருந்து இளைப்பாறுதற்கு ஏற்றதாகவே திருவடி பிரதிட்டை செய்யப்பட்டுள்ள தியான மண்டபம் உள்ளது. திருவடி என்பது தன்னைத் தன்னால் அறிந்து தானே தானாய் இருக்குமிடம். சும்மா இருக்கும் சூட்சத்தில் பொருந்தி இருக்கும் உயர்வற உயர்ந்த இடம். சிதம்பரத்து நாள்வழிபாட்டில்திருப்பள்ளியெழுச்சிக் காலத்தும் பள்ளியறைக்கு எழுந்தருளும் இடத்தும் பூசிக்கப்படும் முதலும் முடிவுமான இடம். முன்னொருபோது திருப்பெருந்துறையிலே பரமாசாரியராக வந்து குரந்தின்கீழ் இருந்து உணர்த்திய திருவடிவழிபாட்டையே இந்நாளில் கொழும்புத்துறையிலே சிவயோக சுவாமிகளாக வந்து இறைவன் உணர்த்தி வைத்தார். எண்ணமெல்லாம்விட்டு ஏகாந்தமோனத்திருக் தம்முழுமையான வழிபாடு திருவடி வழிபாடு. தியானமண்டபத்தின் கீழ்உள்ள புராண மண்டபத்திலே இன்று சிவயோக சுவாமிகளின் திருமேனி பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது சிவயோகசுவாமிகளது சன்னிதானமே சிவதொண்டன் நிலையமாதலால் சுவாமிகளின் திருமேனி பொலிவுமிக்கதாய் இலங்குகிறது. புராண மண்டபத்திலே நிலவும் பாடல் படிப்பு யாவும்மௌனமாய் இருந்து இளைப்பாறுதற்கு ஆயத்தம் செய்யும் சாதனைகளேயாம். இங்கு நிகழும் எளிமையான பூசனையும் மட்டுப்படுத்தப்பட்ட விழாக்களும் மௌனமான மாசிலோசைக்கு இசைவான மந்தம் முரலும் வண்டிசை போன்றனவே இந்த மோன நிறைவைப் பேணும் பொருட்டே சிவதொண்டன் நிலையத்தில் ஒழுங்கு முறைகள் கண்டிப்பாகஅனுசரிக்கப்படுகின்றன. சிவதொண்டன் நிலையத்திலே சிவராத்திரி விரதம் அனுட்டித்துவிட்டு சுவாமியைத் தரிசிப்பதற்காக கொழும்புத்துறை ஆச்சிரமம் சென்று அடியவர் சிலரிடம் நான் இரவு சிவதொண்டன் நிலையத்தில் இருந்தேனே விரதம்அனுட்டித்தஒவ்வொரு வருடனும் கூட இருந்தேனே என சிவயோகசுவாமிகள் கூறியதும் செங்கலடி சிவதொண்டன் நிலைய கால்கோள் முயற்சியில் ஈடுபட்டவர்களிடம் நீங்கள் அங்கு செல்லுங்கள் நான் அங்கு வருகிறேன் எனக்கூறியதும் சுவாமி சிவதொண்டன் நிலையத்தில் உறைந்து அபயமளித்து வரமீந்து வழிநடத்துகின்றார் என்பதற்கான உறுதிமிக்க குறிப்புக்களாம். அவர் நடமாடித்திரிந்த காலத்து தமது கருணை பூத்த திருமுகத்தை சிலவேளைகளில் மறைத்தல் செய்ய வேண்டியிருந்தது. ஆனால் இன்று சிவதொண்டன் நிலையத்து தங்க விக்கிரகங்களிலோ என்னின் அவர் மாறாக்கருணை பனாகவே நிற்கின்றார்.

**ஆகம வழிவிதி**

நற்சிந்தனை வேதம் சுவாமிகள் என்றும் நின்று நிலவும் மந்திரவடிவு ஆகும், அண்ணன்மாரே, தம்பிமாரே, ஆச்சிமாரே கேளீர் என்றுஎல்லார்க்குமாக பயிலும் தமிழிலே தம் திருவாய்மொழிகளை அருளினார். கும்மிப்பாடலிலும், கிளிக்கண்ணியிலும் 'தெம்மாங்கு மெட்டிலும்' அந்நாட்களில் பிரபலமாக இருந்த கீர்த்தன ராகங்களிலும் பாடினார். அவற்றின் உட்பொருளோ மோனம் திகழும் சிவயோகியராலும் அறியொனாதவை அனுபூதியில் இருந்து சுரந்த மொழிகளாதலால் உண்மையும் எளிமையும் உயிர்த்துடிப்பும் மந்திர சக்தியும் கொண்டவை. இலக்கியச்சுவை தெரிந்தார்க்கு அவை உயர்ந்த மறைஞான இலக்கியங்கள். தத்துவ ஞானியருக்கோ பாடியக்காரர்கள் ஆப்பும் சுத்தியலும் எடுத்து நிற்கும் இடங்களிலெல்லாம் பனங்கிழங்கு கிழிப்பது போல எளிதாய் உரைக்கும்திறத்தன சாதகர்க்கோவெனின் அவை முக்தி நல்கும் மந்திரங்கள்.

சிவயோகசுவாமிகளின் சிவதொண்டுகள் யாவும் ஆகம விதிமுறைக்கு இயைந்தன. ஆனால் அவை வெற்றுக்கிரியைகள் அல்ல. பொருளறிச் செய்யாத கிரியைகளை சுவாமி பழித்தனர். ஆகம விதிமுறை அகத்தினில் பொருந்த மெய்யுணர்வைத் தொட்டு நிற்பனவே சிவயோகசுவாமிகளது ஆகம நடைமுறைகளாகும். இதனால் ஆறுமுகநாவலர் அவர்களால் வளமான வடிவம் பெற்ற ஆகமப்பண்பாடு சிவயோகசுவாமிகளால் உயிர்ப்புடையதாயிற்று. ஆறுமுகநாவலர் ஆகமவிளக்கின் கழும்பினைப்போக்கிதூய்மை செய்துவைத்தார். சிவயோக சுவாமிகள் அதனை நலம்சுடர் நல்கும் நந்தா விளக்காய் ஒளிரச் செய்தார். இந்த நந்தா விளக்கே நம்மனோருக்கு நல் வழிகாட்டுவதாகும். ஆனால் மாய இருள் வலிந்து கவரும் இயல்பினது விளக்கு அணையும் தருணத்தை எதிர்பார்த்திருப்பது. ஆதலால் இந்த நந்தாவிளக்கை விளிப்புடன் பேணுவது நம்மனோர் கடனாம.

### அரசியல் முக்கியஸ்தர்கள் பாகிஸ்தானில் கைது

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானின் பிரபல அரசியல் தலைவர்களை பாகிஸ்தான் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

பாகிஸ்தானிய அரசுக்கு எதிரான பேரணியை நடத்த முயன்ற எதிர்கட்சியின் முக்கிய தலைவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களின் பேரணிக்குஆதரவு தெரிவித்து நின்ற மக்கள் குழுவினரையும் பொலிஸார் எச்சரித்து விரட்டியுள்ளனர். (க-8)

## கப்பலிலிருந்து பெருமளவு போதைப் பொருள் மீட்பு

(கன்பரா)

அவுஸ்ரேலியப் பொலிஸாரால் பெருமளவு கெரோயின் போதைப் பொருள் அண்மையில் மீட்கப்பட்டுள்ளது.

சீனாவிலிருந்து பொருள்களை ஏற்றிக்கொண்டுஅவுஸ்ரேலியா நோக்கி வந்த கப்பல் ஒன்றிலிருந்தே இப்போதைப் பொருள்கள் கண்டு பிடிக்கப்பட்டு மீட்கப்பட்டதாக அவுஸ்ரேலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கண்டு பிடிக்கப்பட்ட இப் போதைப் பொருள்கள் சுமார் 5கோடியே 30இலட்சம் அமெரிக்க டொலர் பெறுமதி வாய்ந்ததுஎன அவுஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவித்தனர். (க-08)

## காணாமல்போன இளைஞர் கொழும்பு சேர்ந்தார்

### படைத்தரப்பு உறுதி மொழி

(யாழ்ப்பாணம்)

பலாலியிலிருந்து கடந்த 11ஆம் திகதி காலை 9.00 மணிக்கு விமானம் மூலம் கொழும்பு பயணமாகிய கிருஷ்ணகுமார் என்ற இளைஞர் எவ்வித பிரச்சினையும் இன்றி கொழும்பு போய்ச் சேர்ந்துள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாகபலாலிபாதுகாப்பு நடவடிக்கை தலைமையகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக படைத்தரப்பு மேலும் தெரிவிக்கையில் கிருஷ்ணகுமார் என்ற பெயரையுடைய இந்நபர் 600540378 V என்ற தேசிய அடையாள இலக்கத்தை உடையவர் என்றும் விமானப் பயணச் சீட்டின் இலக்கம் 135516என்றும் 75 கிலோ எடை உடையவர் இவர் என்றும் 12கிலோ நிறை உடைய பொருட்களை எடுத்துச் சென்றார் என்றும் விமானப் பயணத்தின் இல(மெனிபெகஸ் இல. ஜேகே எஸ்/ சிபி 241/02 என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப இளைஞன் கொழும்பில் தனியார் நிறுவனம் ஒன்றில் வேலைபார்ப்பவர் என்றும் தனது குடும்பத்துடன் பஞ்சிகாவத்தையில் வசித்து வருகிறார் என்றும் கொழும்பு பயணமாகிய இவரை காணவில்லையென இவரின் தந்தை சிவசம்பு ஞானரத்தினம் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் புகார் தெரிவித்திருந்தமை குறித்து இம் மாதம் 16 ஆம திகதி 'வலம்புரி' பத்திரிகையில் செய்தி வெளியாகியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

## புதுடில்லியில் அமைதியாக நடந்தேறிய மாநகர தேர்தல்

(புதுடில்லி)

புதுடில்லி மாநகராட்சி மன்ற தேர்தல் நேற்றுக் காலை 8.00 மணி முதல் மிக அமைதியான முறையில் இடம்பெற்றநாக புதுடில்லிச்செய்திகள் நேற்று தெரிவித்தன.

முதல் இரு மணி நேரத்தில் 15% மானோர் வாக்களிப்பில் கலந்து கொண்டதாகதேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

134 வாக்காளர் பிரிவுகளுக்கு 1165 வேட்பாளர்கள் போட்டியிட்டுள்ளனர். 78 இலட்சத்திற்கும் அதிகமானோர் இவ் வாக்களிப்பில் கலந்து கொண்டனர்.

வாக்களிப்பு முடிவுகள் மிக விரைவில் வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க

## எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட நபருக்கு ஒய்வூதியம்வழங்கவேண்டும்

### இந்திய நீதிமன்றம் தீர்ப்பு

(புதுடில்லி)

எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டு இறந்த நபர் ஒருவருக்கு மத்திய அரசாங்கத்தால் ஒய்வூதியம் வழங்கப்படவேண்டும் என இந்திய நீதிமன்றம் ஒன்று தீர்ப்பளித்துள்ளது.

இந்திய எல்லைக்காவல் படையில் கடமையாற்றிவந்த அந்நபர் இரு கிழமைகளிற்கு முன்பாகவே இறந்துள்ளார்.

இவர் காவல் கடமைகளில் ஈடுபட்டிருந்த போது எச். ஐ. வி. கிருமிகளின் தாக்கத்துக்கு உள்ளானது கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்து இவர் பதவியிலிருந்து விலக்கப்பட்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவரின் இறப்பையடுத்து அவரது மனைவியார் நீதிமன்றத்தில் தனக்கும் தனது ஒரு வயது மகளுக்கும் ஒய்வூதியம் வழங்கப்பட வேண்டும் என தாக்கல் செய்யப்பட்ட மனுவையடுத்தே நீதிவான் மத்திய அரசுக்கு இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

இந்தியாவில் சுமார் 40 இலட்சம் மக்கள் எச். ஐ. வி. வைரஸ் கிருமித்தாக்கத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (க-08)

(வண்ணை சிவன் உற்சவகாலக் கவிதை)

## பண்டு போல் வாழஅருள்

மழுவுடையாய் மானுடையாய்
மாணியைக்காத் தளித்தாய்
உழுவையின்தோல் போர்வையாய்
உன்னையேஎன் துணைகொண்டேன்
பழுதுபடும் வாழ்வுடையேன்
பாரில் பண்டு போல் நான் வாழ
வழுவிலா எம் வளமலிவண்ணை
வாழ்முதலே வழி அருள்வாய்

சிவ. சண்முகவடிவேல்,
ஏழாலை

மருவுக மாசற்றார் கேண்
மை ஒன்றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு
-குறள்

# வலம்புரி

## மனத்தாலும் நிராயுதம்

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே இடம்பெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் தமிழ்க கட்சிகள் தமது ஆயுதங்களை நேற்று ஒப்படைத்துள்ளன.

தமிழ்க் கட்சிகளின் ஆயுத ஒப்படைப்பு சமாதானத்தின் அறிகுறி எனலாம்.

விடுதலைப் போராட்டம் என்ற உணர்வோடு புறப்பட்டதமிழ் இளைஞர்ககள் ஓர் இலக்கை அடைவதற்காக வெவ்வேறுபட்ட பாதைகளினூடாகப் பயணங்களை மேற்கொண்டனர்.

பயணத்தில் ஏற்பட்ட பாதை மாற்றங்கள், ஒரே இனத்திற்குள் பெரும் குழப்பங்களையும் குழறுபடிகளையும் உருவாக்கி விட்டது. இதனை அடிப்படையாகவைத்துக் கொண்டுசிங்கள அரசுகள் தமிழினத்தை நசுக்கும் படலத்தைத் தொடர்ந்தன. இத்தகைய ஓர் சூழ்நிலையில் அரசும், புலிகளும்புரிந்துணர்வு ஒப்பந்ததை ஏற்படுத்திக் கொண்டதன் பயனாக தமிழ்க் கட்சிகள் ஆயுதங்களை ஒப்படைத்து சமாதான வழிக்குத் திரும்பும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. நேற்றையதினம் ஈ.பி.டி பியின் யாழ். மாவட்டப் பிரிவு ஆயுதங்களைக்கையளித்துள்ளது. உரிய காலத்தில் ,ஈ.பி.டி.பியினர் ஆயுதங்களைக் கையளித்ததன் மூலம், கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா சரியான முடிவை உரிய நேரத்தில் எடுத்துள்ளார் என்பதை அது கோடிட்டுள்ளது. அதே வேளை, ஏனைய தமிழ்க் கட்சிகளும் தமது ஆயுதங்களை ஒப்படைத்துள்ளமை பாராட்டுக்குரியது. இவ்விடத்தில்யாழ். மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநர் அருட்திரு ஜெயக்குமார் அடிகளார் வெறுமனே ஆயுதங்களைக் கையளிப்பதன்மூலம் நிராயுதபாணிகளாக மாறுவது போல் மனத்தாலும் நிராயுதபாணிகளாக மாற வேண்டும் என சகல தமிழ்க் கட்சிகளிடமும் கேட்டுள்ளார். அருட்திரு ஜெயக்குமார் அடிகளாரின்வேண்டுகோள் நியாயமானது மட்டுமல்ல அதற்குள் கனதியான உள்ளார்ந்தமான அர்த்தம் இருக்கிறது. எனவே தமிழ்க் கட்சிகள் ஆயுத உணர்வை தமது மனங்களில் இருந்தும் களைவது சமாதானத்திற்கான அவசிய தேவையாகும்.

# ஆறுமுகநாவலரால் வளமான, ஆகமவிதிவழியில்
# ஞான குருவாக விளங்கிய சிவயோகசுவாமிகள்

**இன்று சிவயோக சுவாமிகளின் 38வது குருபூஜைதினம்**

திருவருளானது ஆறுமுக நாவலரை ஆகமஅச்சில்வார்த்தெடுத்தது. அவர் ஆகம விதிமுறைக்கு மாறானவற்றை ஈவிரக்கமின்றி ஒதுக்கித்தள்ளினார். ஆகம நெறிமுறையை நிலைநிறுத்த அரும்பாடுபட்டார். இதனால் நமது மண் ஆகமகப் பண்பாடுற்ற சிவபூமி ஆயிற்று. இச் சிவபூமியிலே ஞானதாருஒன்றை நடுதற்கு ஞான நாடகனான இறைவன் திருவுளம் பற்றினன். அவன் செல்லப்பவேடம் தாங்கி நல்லூர் தேரடியில் இருந்து அந்த ஞானதருவை நட்டு வளர்த்தான். அந்த ஞானதாருவே சிவயோக சுவாமிகள்.

### குருவே சிவம்

குருவே சிவமென கூறினர். நந்தி என்பது நமது திருமந்திரம் பக்குவமுற்றோரைப் பற்றிப்பிடித்தற்கென இறைவன் கொள்ளும் போர்வையே குருவுருஎன சாத்திரம்கூறும். செல்லப்பா சுவாமிகள் சிவபெருமானே ஆவர். பிறரெல்லாம் விசரெனக் கண்ட செல்லப்பரை சிவயோக சுவாமிகள் மூவர்களும் ஒன்றாகச்சேர்ந்த நல்ல மூர்த்தம் எனவேகண்டார்.

இருவினையான் மதிமயங்கி இடர்பட்டுக் கிடப்பேனைக் கருணையினால் ஆண்டு கொள்ள கடவுள் திருவுளம் கொண்டு அருள்மேனி தாங்கி அவனியிலே வந்தானைத் திருவாரும் நல்லைநகர்தேரடியில் கண்டேனே.

ஆகியஅவர்தம் திருவாய் மொழிகள் இதற்குச் சான்று தன்னைச் சிவசொருபமாகக் காணவல்ல சிவயோக சுவாமிகளை செல்லப்பர் சிவஞானியாக மலரச்செய்தார்.

ஆசான் அருளால்ஆசானாக மலர்ந்த சிவயோகசுவாமிகள் கொழும்புத்துறையூரில் இருந்த ஒரு கொட்டிலை தமது ஆச்சிரமமாகக் கொண்டார். செல்லப்பர் தமக்கு உணர்த்திய ஞானத்தை உலகம் உய்ய வெளிப்படுத்தி வைப்பது அவர்தம் பணியாக இருந்தது .அது இறைபணியேயாம். அந்த இறைபணியை அவர் நிறைவாகச் செய்தார். அவரிடம் செல்லப்பர் தந்த நன்மருந்து இருந்தது. அந்த நன்மருந்து மாணிக்கவாசக சுவாமிகளுக்கு சிவபெருமான் பரமாசாரியாராக வந்து குருந்த மரத்தின் கீழ் இருந்து ஈந்த அதே மருந்தேயாம் அந்த நன்மருந்தை செந்தமிழ் நாவலனான செல்லப்பர் பழகுதமிழில் வடித்துவைத்தார். அதனை பாடுதுறையறிந்த பைந்தமிழ் நாவலரான சிவயோகசுவாமிகள் நல்லமுதமொழியாக அருளிச் செய்தார்.

### வாசமலர்

'வாசம் பொருந்திய மது மலரால் பூத்துப்பொலியும் மரம் தேன் வண்டுகளை தன்பால் ஈர்க்கும். தேன் வண்டுகள் மதுமலரை நாடி ஆர்வத்தோடு பறந்துவரும். இத்தகைய உள்ளார்ந்த உறவால் சுவாமிகள் அன்பர்களைத் தன்பால் ஈர்த்தார். அன்பர்கள் சுவாமிகளை நாடி ஆர்வமாய் வந்தனர். தன்னை அண்டிவந்த அடியவர்களது யாடிப் பணிசெய்தது. இவ்வண்ணம் ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலம் சிவ தொண்டு புரிந்து கதிரவன் உதயம் பொய்கையில் உள்ள மொட்டுக்களில் முதிர்ந்தவற்றை மலரச்செய்யும், மற்றவற்றை முதிரச் செய்யும் சிவ யோகக் கதிரவன் முன்னிலையில் அன்பரெல்லாரும் மலர்ச்சியடைந்தனர். சிலர் சிவஞானியாய் மலர்ந்தனர். மற்றையோர் யோகியராயும்? பக்தாராயும்? தொழும்பராயும் பரிணமித்தனர்.

சிவயோக சாமியினர் தான் திருவடிக்கலப்புறுவதற்கு முன்னர் தமக்கென்ற இறைபணியை நிறைவாகச் செய்து விட்ட திருப்தியை அடைந்திருந்தார். அவரை சூழ்ந்து ஒரு திருக்குறள் உருவாகியிருந்தது. அவர் தம் சிந்தையில் மலர்ந்த சிவதொண்டன் (செந்தமிழ் ஆங்கிலத் திங்கள் ஏடு) வயது முதிர்ந்த ஆண்டகையாய் வளர்ந்திருந்தான். இலங்கைத் திருநாடு பெற்ற இரண்டு புண்ணியக்கண்க

## சிவதொண்டன்

ளென வடக்கிலும் கிழக்கிலும் இரு சிவ தொண்டன் நிலையங்கள் கால் கொண்டிருந்தன அவர் தம் திருவாய் மொழிகளில் பாவடிவான பலவும் உரை வடிவான சிலவும் நற் சிந்தனைஎன்னும்நூலாக உருப் பெற்று இருந்தது. எங்கள் ஆசான் அருள்மொழிகள் என்னும் இன்னொரு நூலுக்குரிய அமுதமொழிகள் சிவ தொண்டன் ஏட்டிலும் அன்பர்களது தினக்குறிப்புப் புத்தகங்களிலும் பதிவு செய்யப்பட்டு இருந்தன. இவ்விறைபணிகளெல்லாம் இலங்கைத் திருநாட்டை என்றும் இலங்கச் செய்வன. இலங்கையான் எனத் தமை கூறிக்அ கொண்டே சிவயோகசுவாமிகளின் சோதியை என்றும் நின்று நிலவச் செய்வன.

சென்மமலம் எல்லாவற்றையும் தம் திவ்வியபார்வையால் தீர்த்தார். அவர்தம் மாறாப் பிறவியைத் தீர்க்கும் வாக்கியப் பிரசாதம் ஈந்தார். இகபரம் இரண்டும் ஈயவல்ல நற்சிந்தனை என்னும் நல்லமுதம் தரந்தார். வாசமலர் நிறைந்த மரநிழலில் இருப்போர் வாசம் நுகர்தல் இயல்பு.கற்பக தருவின் கீழ் இருப்போர் வேண்டுவ பெறுவர். கொண்டலே போன்றிடும் கொடைமடமான குருபரனைக் குறுகியோர் வேண்டுவ எல்லாம் பெற்றனர். தேவலோகத்து கற்பகத்தரு நடக்கும் இயல்பினதோ என நாம் அறியோம். ஆனால் நற்சிந்தனை என்னும் நறுமலர் சொரியும் சிவயோகக் கற்பகத் தருவோ அன்பர்கள் இடம் தேடிச் சென்று வேண்டுவதை அருளியது. உத்தியோகம் பொருட்டு தத்தம் தொழில் இடங்களில் உறைந்த அன்பர்களின் பொருட்டு கொழும்பு, கண்டி, சம்பளை, அப்புத்தளை என்றுஇலங்கையின் பல பாகங்களுக்கும் நடையபின்றது. முதுமையில் தமது கால் எலும்பு முறியும் வரை ஓடி

உடனுறையும் பேறு பெற்ற அணுக்கத் தொண்டரும் அவ்வப்போது அவரின் அருள வெள்ளத்தில் தீர்த்தம் ஆடிக் கொண்ட பக்தர்களும் அவரிடத்து கொத்தடிமை பூண்ட குடும்பங்களும் இலங்கையிலும் உலகின் பல பாகங்களிலும் இன்றும் வாழ்கின்றனர். அவர்களது நெஞ்சம் தோறும் சிவயோக சுவாமிகளும் வாழ்கின்றார். அவர்கமெல்லாம் வாழையடி'வாழையாகச் சிவயோகசுவாமிகள் தம் சந்ததியாருள் உறைய வேண்டும் என்னும் பெருவிருப்பினர் ஆவர். அவர்களுள் ஞானியராய் மலர்ந்தோர்க்கு சிவயோகசுவாமிகள் தேசுக் கோலத்தை உகுத்தமை பற்றி குறையொன்றும் இல்லை . எங்கு நீ அங்கு நான் என்ற அவர் அடியரை விட்டு எங்கு போய் விட முடியும். அவர் போக்குவரவில்லாப் புண்ணியனல்லவா இத் திருக்குழாம் சிவயோகசுவாமிகள் உத்தேசித்த சிவஞானம் உயிர்ப்புள்ளதென்பதற்கு தக்க சான்றவர்.

சிவயோகசுவாமிகள் அன்பர்கள் இல்லங்களுக்கு தாமாக எழுந்தருளி அருள்செய்த திறம் போல் றதே அவர்தம் சிந்தையில்' மலர்ந்த சிவதொண்டன் ஏடும் திங்கள் தோறும் அன்பர்கள் இல்லங்களிற்குச் சென்று நல்லறிவுச் சுடர்கொளுத்தும்நலமுமாம். எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன் என்பது அவரது சுலோகம். ஆதலால் ஈசனைச் சிந்தித்திருக்கவல்ல உறுதி மொழிகளைக் கொண்டு அவன் விளங்குவான். அவனைச் சுவாமிகள கண்ணும் கருத்துமாய் வளர்த்தார். அவனது ஆண்டு நிறைவுகளின்போது பாழ்செய் மாயாகாரியமகலப் பணிசெய் சிவதொண்டன் என்பது போல வாழ்த்துப் பாடினார். அவரது வாழ்த்துப் பொய்த்துப்போமோ அவன் தளர்ச்சி ஒன்றும் அறியாதவனாய் தாளமேளம் இல்லாமல் வளர்ந்து இன்று 66ம் ஆண்டை அடைந்துள்ளான். சிவதொண்டன் நிலையங்

அணுக்கத் தொண்டர்
சிவயோகசுவாமிகளுடன்

(6ம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்

### வெற்றிக்கு வித்து

தோல்விக்குத் துணை சோர்வும் சோம்பலும்,
வெற்றிக்கு வித்து வீரமும் தீரமும்.

என்னை வெல்ல முயலும் சூழ்நிலையை வெல்லுதற்கான வலிமையும் அறிவையும் அண்ணலே, எனக்கு நீ அளிப்பாயாக.

இடுக்கண்களும் இன்னல்களும் பெரியவைகளாகத் தோன்றி நம்மைத் துன்புறுத்தும் போது என்ன செய்வதென்று திகைக்கிறோம். ஆழ்ந்து எண்ணுதற்கும் முனைந்து முயலுதற்கும் அதுவே உற்ற தருணம். நாம் மீளமுடியாத முட்டுக்கட்டையை இயற்கை அன்னை ஒருநாளும் நம்மீது சுமத்துவதில்லை. ஒவ்வோர் இடுக்கண்களையும் அகற்றுதற்குஉற்றதோர் உபாய முண்டு. பெரிய சோதனை பேராற்றலை உள்ளத்திநின்று வெளிப்படுத்துகிறது. அதன் துணை கொண்டுஅடைந்த வெற்றி பின்பு பெருமகிழ்வாக வடிவெடுக்கிறது.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்



## தவக்கால கிறிஸ்தவ சிந்தனைகள் (41)

**கிறிஸ்து பிறப்பு அறிவிப்பு பெருவிழா**
**(வெள்ளை)**

**திபா 40:7-11. 'என் கடவுளே உமது திருவுளம் நிறைவேற்றுவதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்'**

வானவர் கபிரியேல், நாசரேத் நங்கையின் வீட்டுக் கதவைத் தட்டியபோது, கடவுள் கன்னி மரியாளின் இதயக் கதவைத் ,தட்டுகிறார். கடவுள் தன் மாபெரும் மீட்புத் திட்டத்தை நடைமுறைப் படுத்த ஒரு சிறிய மங்கையின் மறுமொழிக்காகக்காத்திருக்கிறார். 'அருள் நிறைந்தவரே வாழ்க.' என்ற வாழ்த்தும், கன்னிகருத் தாங்கும் செயல்முறையும் அன்று மரியாவுக்குப் புரியவில்லை. இன்று நமக்குப் புரிகிறது. மரியாவை பெண்களுக்குள் பேறு பெற்றவளாக்கியது. அவள் செய்த விந்தைக் குரிய செயல்கள் அல்ல- இறைவனின் வியத்தகு அழைப்பாகும். 'ஆம்' என்று பதில் சொன்ன முறையில் தான் மரியா முதன்மைச் சீடராகி நமக்கு முன் மாதிரியாகிறார்.

'தன் உடலிலும் உள்ளத்திலும் இறைவார்த்தையை ஏற்ற மரியா உலகுக்கு வாழ்வைப் பெற்றுத் தந்தாள்,' எனும் வத்திக்கான் சங்கத்தின் கூற்று எத்தனை பொருள் பொதிந்தது.

காவலன்

மில்க்வைற்
மில்க்வைற் சோப் இன்டஸ்றியல்ஸ்
327, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 3541

# சமாதானத்துக்கு அச்சுறுத்தலாக நாம் ஒருபோதும் இருக்க மாட்டோம்

## ஈ.பி.டி.பி ஜெகன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி சமாதானத்திற்கு எவ்வகையிலும் இடையூறாக இருக்கமாட்டாது. எமது கட்சி சமாதானத்திற்காக தன்னை அர்ப்பணித்து வருகின்றது. இதில் ஒரு கட்டமே எமது பாதுகாப்பிற்காக அரசாங்கத்தால் வழங்கப்பட்ட ஆயுதங்களைநாம் ஒப்படைக்கின்றோம்.

இவ்வாறு ஈ.பி.டி.யின் யாழ் மாவட்ட அமைப்பாளர் கே.வி.குகேந்திரன்(ஜெகன்) தெரிவித்தார்.

நேற்று கட்சியின் யாழ் அலுவலகத்தில் இடம்பெற்ற ஆயுத ஒப்படைப்பு நிகழ்வில் பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில் இங்கு வருகைதந்திருக்கும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம் நாம் கூறிக்கொள்வது மாற்றுக்கருத்துக்களைக் கொண்டிருக்கும் எமது கட்சி உறுப்பினர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தினார்.

ஈ.பி.டி.பியினர் 1995ம் ஆண்டிற்கு பின்னர் தமது காரியாலயங்களை நிறுவி போரினால் நொந்து போயிருந்த மக்களுக்கு தன்னாலான உதவிகளைச் செய்து வந்திருக்கின்றது.

எமது அமைப்பு தனது பாதுகாப்பிற்காகவே ஆயுதங்களை வைத்திருந்தது இந் நிலையில் எம்மிடம் ஆயுதங்கள் இருப்பது சமாதானத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்ற கோரிக் கை பலம்பெற்றிருப்பதனால் எம்மிடமிருந்த ஆயுதங்களை ஒப்படைத்துள்ளோம்.

இக் கட்டத்தில் அரசிடமும் ஒரு கோரிக்கையை விடுகிறோம். இனி வரும் காலங்களில் எமது கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் காரியாலயங்களின் பாதுகாப்பிற்கு அரச படைகளே பொறுப்பாக இருக்க வேண்டும்.

ஈ.பி.டி.பி அமைப்பு சமாதானத்திற்கு ஒருபோதும் அச்சுறுத்தலாக இருக்காது. நாம் சமாதானத்திற்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கத் தயாராகவே உள்ளோம்.

மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் ஒரு சமாதானத்தையே நாம் விரும்புகிறோம். எம்மை பொறுத்தவரை மாற்றுக்கருத்தைக் கொண்ட எமது கருத்தையும் சம்மந்தப்பட்டவர்கள் மதிக்க வேண்டும் என்றும் ஜெகன் மேலும் கூறினார். (இ.19)



காவல்துறையின் அணி வகுப்பு மரியாதையை ஏற்பதற்காக தலைவர் பிரபாகரன் நடந்து வருகிறார்.
அருகில் தமிழீழ காவல்த்துறைப் பொறுப்பாளர் பா. நடேசனும் காணப்படுகின்றார்.

## வயோதிபரின் சடலம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சட்டநாதர் வீதியிலுள்ள இளங்கலைஞர் மன்றத்தின் முன்பாக அநாதரவான நிலையில் காணப்பட்ட வயோதிபர் ஒருவருடைய சடலம் திருநெல்வேலி கிழக்கு கிராம உத்தியோகத்தர் இ.இராசலிங்கத்தினால் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தாமோதரம்பிள்ளை மகேஸ்வரன்(வயது 69) என்பவருடைய சடலமே நேற்றுமதியம் வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டது.

சடலம் தற்போது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ந.5)

### விடுதலைப்புலி...

புலிகளை வரவேற்கும் பதாதைகள் மற்றும் துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இன்று வருகைதரவுள்ள புலிகளின் அணியினர் திருநெல்வேலியில் தமது அலுவலகத் திறப்பு குறித்து முக்கியமாக ஆராய்வர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

பற்களின் வெண்மைக்கும் பாதுகாப்பிற்கும்
அன்னா பற்பொடி
அன்னா தொழிலகம், இணுவில்

## முதலாவது ஆளுநர் ஜயவர்த்தனா காலமானார்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் முதலாவது ஆளுநரான என்.யூ.ஜெயவர்த்தனா நேற்றுக் காலை காலமானார் அவருக்கு வயது 94 சிறந்த தொழிலதிபரான இவர் சம்பத் மற்றும் பேச் வங்கிகளின் ஸ்தாபகத் தலைவராவார். இவர் தற்போதைய பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் விஞ்ஞானத் தொழில் நுட்ப அமைச்சர் மெலிந்த மொறகொடவின் பாட்டன் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந.5)

### ஆலோசகர்...

தெரிவிக்கின்ற போதும் வன்னிப் பகுதியில் எங்கு இறங்குவார் என்று இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது.

அரசுடன் தொடரவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தை குறித்தும், புரந்துணர்வு உடன்படிக்கை குறித்தும், நிரந்தர யுத்த நிறுத்தம் எவ்வாறு கடைப்பிடிப்பது, சமாதானப் பேச்சுக்களை எப்போது எங்கே ஆரம்பிப்பது தொடர்பாகவும் அன்ரன் பாலசிங்கம் தலைவர் பிரபாகரனுடன் ஆராயவுள்ளார்.

இது இவ்வாறு இருக்க அன்ரன் பாலசிங்கத்தின் வன்னி வருகை தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்குத் தெரியப்படுத்தும் நோக்குடன் நோர்வேத் தூதுவர் எரிக்சொல்ஹெம் நேற்று கொழும்பு வந்து சேர்ந்துள்ளார். (வ)

## அமைச்சர் மகேஸ்வரன் வெலிக்கடைக்கு விஜயம்

### பெண் கைதிகளை பார்வையிட்டார்

(கொழும்பு)

வெலிக்கடையில்பெண்கள் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 40பெண் கைதிகளை இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் நேற்று நேரில் சென்று பார்வையிட்டு அவர்களின் குறைநிறைகளை கேட்டறிந்ததுடன், அவர்களின் விடுதலைதொடர்பாக சட்டமா அதிபர் கமலசபேசனுடன் தொடர்புகொள்வதாகவும் கைதிகளிடம் தெரிவித்தார்.

வெலிக்கடை சிறையில் கடந்த பல வருடங்களாக பச்சிளம் பாலகர்கள் உட்பட வடக்குக் கிழக்கைச் சேர்ந்த 40பெண் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களது வழக்கு விசாரணைகள் வருடக்கணக்காக விசாரணை மேற்கொள்ளப்படாது இருந்து வருவதாகவும். பச்சிளம் பாலகர்கள் இருவருக்கும் எந்தவிதமான சத்துணவுகளும் வழங்கப்படுவதில்லை எனவும் அமைச்சர் மகேஸ்வரனிடம் அவர்களின் தாயார் கண்ணீர் மல்க தெரிவித்துள்ளார்.

சிறையிலுள்ள கைதிகளின் பெயர் விபரம் தங்கையா விஜயலதா (துணுக்காய்), தம்பு இரத்தினா (சுழிபுரம்), தண்டபாணிசர்மா பிரவீனா (கரவெட்டி), மாணிக்கம் ஞானசரஸ்வதி (சித்தன்கேணி), கந்தையா சிவரஜனி (கல்வயல்), சித்திரசேனன் திருமகள் (மன்னார்), முத்துக்குமாரு சரஸ்வதி (கிளிநொச்சி), பாலநாயகம் செல்வராணி (வவுனியா), துரைராஜா ராஜேஸ்வரி (காரைநகர்) லிங்கம் பூபதி (வவுனியா), அமிர்தலிங்கம் கலைச்செல்வி (அவரது இரண்டரை வயது இரணைப்பிள்ளைகள் ஸ்ரீலக்சன், சிவலக்சன் மட்டக்குளி), சந்துரு குலசிங்கம் சாந்தினி (வெள்ளவத்தை), தவச்செல்வம் சாருமதி (அத்தியடி), செல்வராசா அம்பிகா (வாகரை), வரதராஜா வனஜா (இணுவில்), விஜயரத்தினம் சுதர்சினி (முல்லைத்தீவு), சிதம்பரப்பிள்ளை துஸ்யந்தினி (கோண்டாவில்), தெய்வேந்திரம் சுகிர்தமலர் (வண்ணார் பண்ணை) (வ)

## தீக்கிரை

(யாழ்ப்பாணம்)

யாழ். கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள உணவகம் ஒன்று நேற்று இரவு 10.30 மணியளவில் எரிந்து சாம்பலாகியுள்ளது. இதனால் உணவுச்சாலையின் சீற், கூரை மற்றும் கண்ணாடி அலுமாரிகள் என்பன வெடித்துச் சிதறியுள்ளன. (இ)

### ஈ.பி.டி.பியினர்...

| | | |
|---|---|---|
| * 81 எம். எம் மோட்டார் ஏவுகலம் | - | 02 |
| * 81 எம். எம் மோட்டார் செல்கள் | - | 43 |
| * 7.62 எம். எம் ரவைகள் மற்றும் ஏ.கே. எல். எம். ஜி ரவைகள் | - | 18000 |
| * மகசீன் | - | 4900 |
| * தண்ணீர் கான்கள் | | |
| * ஜக்கற் | | |

மற்றும் இராணுச் சப்பாத்துக்கள் பெருமளவு (இ-19)

### ஈ.பி.டி.பியினர் நேற்று...

அதிபர் கே. சண்முகநாதன் மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் யாழ் நாகவிகாரை தேரர் வணக்கத்துக்குரிய ஒலிட்ரி கமுக ஞானரத்தின தேரர் அருட் தந்தை எஸ். ஜெயக்குமார், ஈ.பி.டி.பி பிரதேச சபைத் தலைவர்கள் மற்றும் கட்சியின் பிரதேச அமைப்பாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை இந்நிகழ்வில் கட்சியின் யாழ் அமைப்பாளர் ஜெகன், நாகவிகாரைத தேரர் ஒலிட்ரி கமுக ஞான ரத்தின தேரோ அருட்தந்தை எஸ். ஜெயக்குமார், சர்வதேச மோதல் தவிர்ப்பு கண் காணிப்புக் குழுப் பிரதிநிதி மற்றும் 51ஆவது பிரிகேட் ராணுவ தளபதி ரஞ்சித் சில்வா ஆகியோர் உரையாற்றினர். (இ-19)

### பத்திரிகையாளர்...

கலந்து கொள்வர். இதே வேளை புலிகளின் தலைவர் கடந்த காலங்களில் போராட்டம் முனைப்புப் பெற்றிருந்த வேளையில் பொது மக்கள் மத்தியிலோ, பத்திரிகையாளர் மத்தியிலோ தோன்றுவதையோ, பேசவதையோ தவிர்த்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

### வவுனியாவிலும்...

பிரைஜைகள் அரச அதிகாரிகள் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் ஊடகவியலாளர்கள் முன்னிலையில் தத்தமது ஆயுதங்களைக் கையளித்தனர். ஈ.பி.டி.பி அமைப்பின் சார்பில் வன்னி மாவட்ட அமைப்பாளர் சிவன் சிவகுமார் ரி. 56ரக துப்பாகிகள் 9, அதற்குரிய மகசீன் 36, 791 ரவைகள், 9 மில்லிமீற்றர் கைத்துப்பாக்கி 3, அதற்குரிய ரவைகள் 30 ஆகிய ஆயுதங்களைக் கையளித்தார்.

வைரவப் புளியங்குளத்தில் உள்ள புளொட் அலுவலகத்தில் வைத்து புளொட் அமைப்பு முக்கியஸ்தர் பவான் ஆயுதங்களை கையளித்தார் இவ் வைபவத்தில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் கலந்து கொண்டார்.

ஈ.பிஆர்.எல்.எவ் வரதர் அணியின் சார்பில் அமைப்பாளர் ரி. லிங்கேஸ்வரன் ஆயுதங்களைக் கையளித்தார். ரி.56 ரக துப்பாக்கிகள் 13, அதற்குரிய மகசீன் 16, ரவைகள் 1033, கைத்துப்பாக்கிகள் 3, அதற்குரிய ரவைகள் 36, கிரனேட் 15 என்பன அவரால் கையளிக்கப்பட்டன. (வ)

கட்டிடபொருட்கள் விநியோகிப்பதற்கான கேள்வி .
ஜீரிசற் – யாழ் புனரமைப்பு திட்டம்
எமது பாடசாலைகள் வீடுகள், புனரமைப்பு திட்டத்திற்கு தேவையான கட்டிடப் பொருட்கள் (கண்டகல், கிறசர்கல், மணல், ஏனைய இரும்பு வகைகள், பூட்டு பிணைச்சல்கள், குழாய்கள் மல கூட தளபாடங்கள்) போன்றவற்றை விநியோகிப்பதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.
கேள்விகளை சமர்ப்பிக்க விரும்பும் விநியோகஸ்தர்கள் கீழ் காணும் விலாசத்தில் செயல்படும் எமது அலுவலகத்தில் கேள்விப் படிவங்களையும் ஏனைய விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
கேள்விகள் 05.04.2002 பிற்பகல் 2.00மணிவரை எமது அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.
GTZ-JRP
11 கண்டிவீதி,
யாழ்ப்பாணம்.
(4870)
இணைப்பாளர்
23. 04. 2002

புற்று நோய்க்கான ஆயுர்வேத மருந்து
அமுதசுரபி – 7
ஸ்ரீபதி சபாராஜ ஆயுர்வேத ஔடத நிலையத்தின் அதிசிறந்த தயாரிப்பு
(அல்வாய் தெற்கு)
53 மூலிகைகளின் கூட்டுப்பொருள்.
நோயை நிட்சயப்படுத்திய பின்பு இம்மருந்து சிகிச்சைக்கு பயன்படுத்தக் கூடிய நோய்கள்.
- புற்றுநோய்த் தாக்கம்
- நீர்க்கோவை செறிந்த இழைய வீக்கம்
- கர்ப்பிணிகளுக்கு இரத்தத்தில்
- நச்சுக்கலப்பினால் ஏற்படும் தீவிர வலிப்பு
- வெள்ளை வெட்டைநோய்
- மேக நோய்
- சிறுநீரகக் கோளாறு
- குருதி நச்சூட்டு
- ஈரற் சீழ்க்கட்டு
(4870)
கிடைக்குமிடம்:-
இராசையா மருந்துக்கடை
காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்

சுரவெட்டியாக்குரை விநாயகர் ஆலய
7ம் திருவிழா விஞ்ஞாபனம்
இன்று மாலை 3.30மணிக்கு
சிறப்பு நாதஸ்வர தவில் கச்சேரி
நாதஸ்வர வித்துவான், நாதஸ்வர கான கலாநிதி
கலாசூரி, நாதஸ்வரசக்கரவர்த்தி, நாதகான பூபதி
N.K.பத்மநாதன் அவர்கள்
சிறப்புத்தவில்:
தமிழகத்தின் தானைத்தவில் மேதை தாள வாத்ய
ஜனரஞ்சக லய ஏகசக்கரவர்த்தி காஞ்சிகாமகோடி
பீட ஆஸ் தான வித்வான்
கலைமாமணி திருவாளப்புத்தூர்
T.A.கலியமூர்த்தி அவர்கள்
சிறப்புத்தவில்:
மறைந்த மாமேதை இணுவில்
N.R.சின்னராஜா அவர்களின் புதல்வர்
லயஞான கலாநிதி தவில் இளவரசன்
N.R.S.சுதாகரன் அவர்கள்
இணைந்து வழங்கும் மாபெரும் நாதஸ்வர தவில் கச்சேரி
உபயகாரர்கள்.

இப்பத்திரிகை வலம்புரி அச். கோ. ஸ்தாபனத்தினால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.03.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது